Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 21 புதன்கிழமை (04.05.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 217

(C/638) Job! With High Salary
Follow

Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

## ஒசாமாவின் மரணத்தில் சந்தேகம்; கேள்வியெழுப்புகிறது செய்தி நிறுவனம்

### தப்புத்தாளம் போடும் புகைப்பட ஆதாரங்கள்



(கொழும்பு)

அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதாகக் காட்டப்பட்ட படங்கள் போலியானவை என்று Agence France Press தமது சிறப்புக் கணினி மென்பொருள் மூலம் நிரூபித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி மத்திய கிழக்கு (11 ஆம் பக்கம் பார்க்க)

## ரொபேட் ஓ பிளேக் நேற்று கிளிநொச்சியில்

### நிலைவரம் அறிந்து திரும்பினார்

(கிளிநொச்சி)

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெ ரிக்காவின் உதவிச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி தேசிய பேரவை அலுவலகத்தில் இளைஞர் (12 ஆம் பக்கம் பார்க்க)



# வடக்கின் இன்றைய நிலை என்ன? அமெரிக்க அரசுக்கு அறிக்கை!

(கொழும்பு)

**வடபகுதியின் இன்றைய நிலைவரம் குறித்து விரிவான அறிக்கையொன்று அமெரிக்காவுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. புலிகளுடன் இடம்பெற்ற இறுதி யுத்தத்துக்குப் பின்னர், வடபகுதியில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறித்து உண்மை நிலைவரங்களை அறிந்துகொள்வதற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அதிக ஆர்வம் காட்டி வருகின்றது.**

நேற்றைய தினம் வடபகுதிக்கு விஜயம் செய்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் வடக்கின் இன்றைய நிலைவரங்களை அறியும் முயற்சியில் ஆர்வத்துடன் காணப்பட்டார்.

நேற்றையதினம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்த அவர், தான் சந்தித்த அரச அதிகாரிகள், பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோரிடமிருந்தும் வடக்கின் இன்றைய நிலைவரம் குறித்து விலாவாரியாகக் கேட்டறிந்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியமர்வு குறித்தும், அவர்களுக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் உதவித் திட்டங்கள் குறித்தும் நேரடியாகச் சென்றும் அவர் பார்வையிட்டார்.

'யு.எஸ் எயிட்' நிறுவனத்தின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய நாடாளுமன்றில் இலங்கைத் தமிழ் உறுப்பினர்



(ரொறன்ரோ)

கனடாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ராதிகா சிற்சபைஈசன் வெற்றி பெற்று நாடாளுமன்றம் செல்லும் முதல் தமிழராக இடம்பிடித்துள்ளார்.

மீண்டும் கன்சவேட்டிவ் கட்சி பெரும்பான்மை அரசை அமைத்துள்ளது. புதிய ஜனநாயகக் கட்சி 70 ஆசனங்களை மேலதிகமாக (11 ஆம் பக்கம் பார்க்க)


## ஐ.நா. அறிக்கை குறித்து ரொபேட் ஓ பிளேக் பேசமாட்டார்

### அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் ரொபேட் ஓ பிளேக் ஐ.நா. அறிக்கை குறித்து எவருடனும் பேச்சு நடத்தமாட்டார் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை விவகாரம் பற்றி மட்டும் அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேட் (12 ஆம் பக்கம் பார்க்க)



## தேசிய அமைப்பாளராக ரவி கருணாநாயக்க தெரிவு

### ஐ.தே.கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக, தான் நியமிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரைத் தெரிவு செய்யும் முகமாக கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதிகளின் கூடாரம் பாகிஸ்தான்; இந்திய அரசு தொடுக்கும் கண்டனக் கணை

(புதுடில்லி)

ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, இந்திய அரசு விழிப்படைந்து பாகிஸ்தான் மீது கண்டனக் கணைகளைத் தொடுத்துள்ளது.

ஒசாமா மட்டுமல்ல, பல்வேறு பயங்கரவாதத் தலைவர்கள் பாகிஸ்தானில் கூடாரமிட்டுள்ளதாக இந்திய அரசு பாகிஸ்தான் மீது குற்றம் சுமத்தியுள்ளது. அதன் விபரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

பின்லேடன் பாகிஸ்தானில் வைத்து கொல்லப்பட்டிருப்பதை அடுத்து பின்லேடனுக்கு இது வரை பாகிஸ்தான் அரசுதான் அடைக்கலம் கொடுத்து இருப்பது உறுதியாகி உள்ளது.

இதேபோல இந்தியாவில் பெரியளவில் தாக்குதல் நடத்தி விட்டு தலைமறைவாகி உள்ள முக்கிய தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான்தான் அடைக்கலம் கொடுத்துள்ளது.

அவர்கள் அனைவரும் பாகிஸ்தான் அரசின் ராஜ உபசரிப்புடன் முக்கிய பிரமுகர்கள் போல பாகிஸ்தானில் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அடைக்கலம் கொடுத்துள்ள 6 முக்கிய தீவிரவாதிகள் விபரம்:-

1. தாவூத் இப்ராகிம்:- 1993 ஆம் ஆண்டு மும்பையில் தொடர் குண்டு வெடிப்புகளை நடத்தி 257 பேர் பலியாகக் காரணமாக இருந்தவர். தற்போது கராச்சியில் வசிக்கும் அவரும் உலக அளவில் கடத்தல் தொழிலில் கொடிகட்டிப் பறக்கிறான்.

2. ஹபிஸ் சயீத்:- லஷ்கர் இ தொய்பா இயக்கத்தின் தலைவன். 2008 ஆம் ஆண்டு மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு காரணமாக இருந்தவன்.

3. ஷகி உர் ரகுமான் லக்வி:- 2006 ஆம் ஆண்டு மும்பையில் ரயில்களில் நடந்த குண்டு வெடிப்பு மற்றும் 2008 ஆம் ஆண்டு தீவிரவாதிகள் தாக்குதலுக்கு காரணமாக இருந்தான்.

4. மசூத் ஆசார்:- ஜெய் சீ முகமது தீவிரவாத இயக்கத்தின் தலைவன். 2001 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நடந்த தாக்குதலுக்குக் காரணமாக இருந்தான்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச் செல்வங்களே**

**உள்ளே கல்வி முரசு**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் விசேட வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

# தீவக மக்களுக்கு இப்போது கடல் உணவுகள் எட்டாக்கனி

## அதிகாரிகள் கண்டு கொள்ளாதது ஏன்?

(ஊர்காவற்துறை)

தீவகப்பகுதியில் கடலுணவுகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டின் கடல் வளம் நிறைந்ததும், அதிகமாக கடற்தொழிலாளர்கள் செறிந்து வாழும் தீவகப்பிரதேசத்தில் கடலுணவுகள் போதியளவுக்கு கடல் தொழிலாளர்களால் பிடிக்கப்படுகின்றபோதும் குடா நாட்டுச் சந்தைகளை ஆக்கிரமித்துள்ள தென்பகுதி மீன் தரகர்கள் தற்போது நேரடியாகவே குளிரூட்டி பொருத்தப்பட்ட கொள்வனவு வாகனங்களில் தீவகப் பகுதிகளுக்குச் சென்று நேரடியாகவே மீனவர்களிடம் கடலுணவுகளை உடன் பணத்துக்கு எடுத்துச் செல்வதாலேயே தற்போது இத்தட்டுப்பாடு ஏற்படக் காரணம் எனக் கூறப்படுகிறது.

மேற்படி நிலைமைகளால் தீவகத்தின் உள்ளூர் மீன் சந்தைகள் வெறிச்சோடிக் காணப்படுவதுடன் சந்தைக்கு வரும் சிறியரக மீன்வகைகளுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோமீன் சுமார் 300-500 வரைக்கும்விற்கப்படுகின்றது.

இந்நிலையில் தீவகப்பகுதி கடற்தொழிலாளர்களால் பிடிக்கப்படும் மீன்களில் கணிசமான அளவு உள்ளூர் சந்தைகளுக்கு வழங்குவதன்மூலம் தீவகப் பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மேலதிகமாகப் பெறப்படும் கடலுணவுகளை வெளியூர் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளையும் அப்பகுதிகளைச்சேர்ந்த கடற்தொழில்சங்கங்கள் மேற்பார்வை செய்வதன் ஊடாக மக்களின் தேவைகளை நிறைவுசெய்யமுடியும். எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (27)

## கலந்துரையாடல்

(ஊர்காவற்துறை)

யாழ்.மாவட்ட பனைதென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10.00 மணிக்கு வடமாகாண பனைதென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடல் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், இக்கலந்துரையாடலில் 89ஆவது சர்வதேச கூட்டுறவுதினவிழா தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளமையால் அனைத்து பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க தலைவர் பொதுமுகாமையாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சமாசப் பொது முகாமையாளர் எஸ். சிவகுமார் தெரிவித்துள்ளார். (27)

## வலி. வடக்கு அலகு புனரமைப்பு ஆரம்பம்

### விரைவில் புதிய நிர்வாகம்

(தெல்லிப்பளை)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலிகாமம் வடக்குப்பிவின் அலகு, பிரிவின் கூட்டங்கள் வெகுவிரைவில் நடாத்தப்படவிருக்கின்றன. ஆகவே பிரிவில் உள்ள ஆயுள்கால அங்கத்தவர்கள் பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வசித்துவரும் நிலையில் ஒவ்வொருவரும் தாம் இப்போ வசிக்கும் முவரியை 7ஆம் கட்டை கே.கே.எஸ்.வீதி தெல்லிப்பளை என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு பிரிவுச் செயலாளர் சி. நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (70)

## மஹோற்சவம்

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் வைகாசி மகோற்சவம் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 16ஆம் திகதி தேர் உற்சவம் 17ஆம் திகதி பூரணை தினத்தன்று தீர்தோற்சவமும் இடம்பெறும். (கா)


தபால் மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six month

தமிழ்மொழி மூலம்

20 வருட அனுபவம்

Dip. in psy chology - உளவியல் டிப்ளோமா
Dip. in office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Health & Hospital Management- சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

● கல்முனை ● கண்டி ● மன்னார் ● புத்தளம் ● யாழ்ப்பாணம் ● கொழும்பு
● வவுனியா ● மட்டக்களப்பு ● ஹட்டன் ● திருகோணமலை ● அனுராதபுரம்

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கை நெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக் கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 4848

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

Country Co-Ordinator
MARUTHUR -A-HASSEN
(B.sc. Psychology, M.sc.. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOE SUPERMARKET COMPLEX
MAIN STREET, SAINTHAMARUTHU - 07
Web: www. aiimas.com, www iimat.com, www aicomas. oyg
Tel: 067 222 2917, 067 367 1749, 067 367 9688, 071 803 4848



(C/699)

விண்ணப்ப முடிவு திகதி : 10-05-2011


## மீண்டும் ஆரம்பம் ஞானம்ஸ் ஹோட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மின்சார நிலைய வீதியிலுள்ள ஞானம்ஸ் ஹோட்டல் 24 வருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க இந்த ஹோட்டலை திறந்து வைத்துள்ளதாக பலாலி இராணுவ ஊடகப்பிரிவு நேற்று செவ்வாய்கிழமை அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலை காரணமாக 1987ஆம் ஆண்டு முதல் ஞானம்ஸ் ஹோட்டலின் செயற்பாடுகள் தடைப்பட்டன. பின்னர் இலங்கை இராணுவத்தினரின் 512ஆவது படைப்பிரிவினர் இந்த ஹோட்டலை கையகப்படுத்தியதிலிருந்து அது பாதுகாப்பு வலயத்தில் முடங்கியிருந்தது.

நாட்டில் யுத்தம் ஓய்வடைந்து சுமுகமான நிலைமை ஏற்பட்டதை தொடர்ந்து கடந்த ஜூன் மாதம் ஞானம்ஸ் ஹோட்டல் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த திறப்பு விழாவில் யாழ். பொலிஸ் நிலையத்தின் உதவி அத்தியட்சகர் அபய சில்வா, பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா, வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.அச்சுதன், யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் வங்கி முகாமையாளர்கள், வர்த்தகர்கள், மற்றும் ஹோட்டல் உரிமையாளர் ச.கைலாசபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நல்லைக் குமரன் மலருக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வழமைபோன்று 2011ஆம் ஆண்டு வெளியிடப்படவுள்ள 19ஆவது நல்லைக் குமரன் மலருக்குகந்த தரமான ஆக்கங்கள், ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள் போன்ற முறைசார்ந்த அறிஞர்கள் கல்விமான்கள், சைவப் பெரியார்கள் போன்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

அனைத்து விதமான ஆக்கங்களையும் எதிர்வரும் 30.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், சைவசமய விவகாரக் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல்முலையில் நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்கள் 2011 எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு சைவசமய விவகாரக் குழு வேண்டிக்கொள்கின்றது.

## இலவச கணினிப்பயிற்சி

(தெல்லிப்பளை)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலிகாமம் வடக்குப்பிரிவும் தேசிய சேவை மன்றமும் இணைந்து நடாத்தும் இலவச கணினி பயிற்சி வகுப்புகள் 7ஆம் கட்டை கே.கே.எஸ். வீதி தெல்லிப்பளையில் அமைந்துள்ள வலிகாமம் வடக்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்கப் பிரிவு அலுவலகத்தில் ஆரம்பமாக விருக்கின்றன.

பயிற்சி பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 7ஆம் திகதிக்கு முன் பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். வலிகாமம் வடக்குப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் பயிற்சிக்காலம் 6 மாதங்களாகும்.

பயிற்சி முடிவில் சகலருக்கும் சான்றிதழ் வழங்கப்படுமென இலங்கை செஞ்சிலுவைச்சங்க பிரிவுச் செயலாளர் சி.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (70)

## அரச காணிகள் பகிர்ந்தளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்ததைத் தொடர்ந்து அரச காணிகள் அளவீடுசெய்து பகிர்ந்தளிக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஆரம்ப நடவடிக்கையாக மக்கள் குடியிருக்கும் காணிகள் அனைத்தையும் பதிவு செய்யும் வேலைகளை காணித்திணைக்கள உத்தியோகத்தர்கள் செய்து வருகின்றனர்.

இதன் பின்னர் காணிகள் நில அளவைத் திணைக்களத்தினால் அளவீடு செய்யப்பட்டு ஒவ்வொரு வருக்கும் பகிர்ந்தளிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. (70)

## இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்கு இலக்காகி கடந்த ஒன்றரை மாதங்களாக யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த ராஜீவ் கவிதா (வயது 22) என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் பற்றிதெரியவருவதாவது, குறித்த பெண் இரவுப் படுக்கையில் இருந்த போது மண்ணெண்னை விளக்கு நுளம்பு வலையில் தீப் பற்றிக்கொண்டபோது எரிகாயங்களுக்கு இலக்காகி கடந்த பங்குனி மாதம் 24ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் சிகிச்சை பலன்இன்றி நேற்று முன்தினம் இரவு மரணமானார் என அவரது கணவர் தெரிவித்தார். (பா)

நமக்குப் பாரமாக இருக்கும் மனிதர்களை மன்னித்துவிடலாம். நாம் பிறருக்குப் பாரமாக இருப்பது தான் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

- பெர்னாட்ஷா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தீவிரவாதிகளின் முடிவு

சர்வதேச ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டமை தீவிரவாதத்தை அடியோடு வெறுக்கும் நாடுகளுக்கு தித்திப்பானதொரு செய்தியாக அமைந்துவிட்டது.

உலக நாடுகளின் தீவிரவாதிகள் பட்டியலில் முதலாவது இடத்தைப் பெற்றிருந்த ஒசாமா பின் லேடன் சுட்டுக்கொல்லப்பட்டபோது அவருக்கு வயது ஐம்பத்திநாலு.

2001ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையம் மீதான, பின் லேடனால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் மேற்குலக நாடுகளின் கருவறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி யிருந்தது.

அமெரிக்கா உட்பட்ட முதலாளித்துவ ஏகாதி பத்திய நாடுகளின் பலத்த கண்டனங்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் ஆளான பின் லேடனை அனைத்து மேற்குலக நாடுகளும் பொதுவான எதிரியாகவே கருதி வந்தன.

உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டு பத்து ஆண்டுகளின் பின் பில்லேடன் சுட்டுக்கொல்லப்பட் டிருக்கிறார் என்றால், அவரது திரைமறைவு வாழ்க்கை எந்தளவுக்கு பலம் பொருந்தியதாக அமைந்திருந்தது என்பது சொல்லாமலே விளங்கும்.

உலக நாடுகளைப் பொறுத்த வரையில் எந்த வொரு நாடும் தீவிரவாதத்தை அல்லது தீவிரவாதி களை ஆதரித்து வந்ததாகவோ, அவர்களுக்குப் புகலிடம் வழங்கியதாகவோ இருந்தமையைக் கண்டுகொள்வது அரிதாகவே இருந்தது.

பாகிஸ்தானின் தலைநகரமான இஸ்லாமாபாத் திற்கு அண்மித்த அஹமதாபாத் நகரில் பாகிஸ்தான் இராணுவ சிற்றிக்கு அருகாமையில் பாதுகாப்பு அரண்கள் அமைத்து, இரகசியமாகக் குடியிருந்த பின்லேடன், அமெரிக்க உளவுப் படையின் வேவு நடவடிக்கையை அடுத்து 40 நிமிட சமரின் பின் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

தீவிரவாத ஒழிப்பில் தீவிர கவனம் செலுத்தி, அதில் வெற்றிகண்ட இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு, பின்லேடன் கொல்லப்பட்டமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்திருக்கும் அதேவேளை, சிறு பிள்ளைகள் கொல்லப்பட்டமைக்கும் வருத்தம் தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் பின்லேடன் கொல்லப்பட்டமையை வரவேற்றுள்ளதுடன், தீவிரவாதத்தை ஒழித்துக்கட்ட பாகிஸ்தான் உட்பட்ட சர்வதேச சமூகமும் தீவிரமாகச் செயற்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சரிந்துபோயிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட பின், அதிகரித்துக் காணப்படுவதாக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பின்லேடனைச் சுட்டுக்கொன்றது அமெரிக்கா தான் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளமையானது, பின்லேடன் கொல்லப்பட்டது யாரால் என்ற சந்தேகத்தை எழச் செய்கிறது. எனினும், அமெரிக்கா தானே சுட்டுக்கொன்றதாக உறுதிபடத் தெரிவித்துள்ளது.

பின்லேடன் பாகிஸ்தானில் வைத்துக் கொல்லப் பட்டதாக அறிவிப்பு வெளியான கையோடு, தலிபான் அமைப்பு, அமெரிக்காவையும், பாகிஸ்தானையும் பழிவாங்கப்போவதாக அறிவித்திருப்பது மேற்குலக நாடுகளின் குதூகலிப்பிற்கு வேட்டு வைத்துள்ளதாக அமைந்துள்ளது.

இந்நிலையில், தீவிரவாத ஒழிப்பில் இலங்கை வெற்றி கண்ட பின்பே, அமெரிக்க வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரம் தாக்கி அழிக்கப்பட்ட பத்து ஆண்டுகளின் பின்பே, அதன் சூத்திரதாரியான பின்லேடனை அமெரிக்காவால் அழிக்க முடிந்தது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

-ஆசிரியர்-

# கூட்டமைப்பு உறுப்பினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா நகர சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைச் சேர்ந்த உறுப்பினர் சுரேன் என்பவருக்கு எதிராக வவுனியா நகரசபை ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா நகர சபைச் செய லாளர் வே. வசந்தகுமாரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சி உறுப்பினர் சுரேன் அவமதித்து நடந் தமையைக் கண்டித்தே இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

கடந்த 28ஆம் திகதி வேப் பங்குளத்தில் பிளாஸ்ரிக் செய்யும் நிறுவனம் ஒன்றினால் பிளாஸ்ரிக் செய்யும் பொருட்கள் கையளிப்பு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் இவ் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினால் உறுப்பினர் சுரேன் செயலாளரை சபை மத்தியில் அவமதித்துப் பேசி யதைக் கண்டித்தே இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக நிறுவனங் களுக்கும், கட்சி அமைப்புகளுக்கும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் நகர சபை ஊழியர்கள் தெரியப் படுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ள னர்.

இது தொடர்பாக நேற்று முன் தினம் காலை 11.30 மணியளவில் முன்னாள் நகர சபைத் தலைவர் லிங்கநாதன் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தான் பதவியில் இல்லை என்பதால் தன்னால் எது வித உடனடி நடவடிக்கையும் மேற் கொள்ள முடியாது என்றும் இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக் கட்சியின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும் தெரி வித்துச் சென்றுள்ளார். (12, 39)

## வட்டக்கச்சிப் பிரதேச வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை

(முரசுமோட்டை)

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சிப் பிரதேசத் திற்குச் செல்லும் அனைத்து வீதிகளும் மிகவும் மோச மாகச் சேதமடைந்து காணப்படுவதாகவும் இதனால், இவ்வீதிகளூடாகப் பயணிக்கும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

கிளிநொச்சியிலிருந்து கோவிந்தன் கடைச் சந்தி யூடாகப் பயணிக்கும் வீதியில் பன்னங்கண்டி பாலத் துக்கு அருகில் வீதியின் நடுவே பாரிய குழியொன்று காணப்படுகின்றது. இதனால் இரவு வேளைகளில் இவ்வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதாகவும் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் பகல்வேளை களில் கூட சில விபத்துச் சம்பவங்கள் இடம்பெற் றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தர்மபுரத்திலிருந்து கல்மடு ஊடாகச் செல்லும் வீதியின் நாவலடிப் பகுதியில் அமைந்துள்ள பாலம் உடைந்த நிலையில் காணப்படுவதால் இதனூ டான வாகனப் போக்குவரத்து பெரும் அச்சத்துட னேயே இடம்பெறுவதாக சாரதிகள் தெரிவிக்கின் றனர்.

எனவே, உரியவர்கள் பொதுமக்களின் நலன்கருதி இவ்வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

## புனரமைப்பு

கிளிநொச்சி கல்வி வலயத்தினால் பரந்தன் ஆசிரிய மத்திய நிலையத்தைப் புனரமைப்பதற்கான ஏற்பாடு கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்துடன் அப்பகுதியிலுள்ள காணியில் நீர்த்தாங்கி மற்றும் வேலிகளும் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (100)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்று முதல் நேர்முகத்தேர்வு

(பூநகரி)

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நீண்ட காலமாகக் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர் களின் தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகத் தேர்வு இன்று முதல் எதிர்வரும் எட்டாம் திகதி வரை நான்கு தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நேர்முகத் தேர்வு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதுடன் இதில் 300இற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடமாகாண ஆளுநரின் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறுவதற்கான ஆசிரியர் களைத் தெரிவு செய்வதற்காகவே இந்நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளதால் தொண்டர் ஆசிரியர்கள் வருகை தரும்போது பிறப்புச் சான்றிதழ், க.பொ.த. சா/த, உ/த சான்றிதழ், தொண்டர் ஆசிரியர் நியமனக் கடிதம், சேவையை உறுதிப்படுத்தும் அதிபரின் கடி தம், கற்பித்த பாடங்களுக்கான நேரசூசி ஆகியவற்றைத் தவறாது கொண்டு வருமாறு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

## சுனாமி பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கம் உதவி

வடமராட்சி கிழக்கில் சுனாமி மற்றும் அனர்த்தங்களினால் மிக வும் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு வீடமைத்துக் கொடுப்ப தற்கு அவுஸ்ரேலியா செஞ்சிலு வைச் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் பிரகாரம் இவ்வீடமைப் புத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத் துக்கு வீடமைப்பதற்கென 3 இலட் சத்து 25 ஆயிரம் ரூபாவும், மலசல கூடம் அமைப்பதற்கு 25ஆயிரம் ரூபா வும் வழங்கப்படவுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள மாமுனை, செம்பியன்பற்று தெற்கு, தாளை யடி, மருதங்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்க ளுக்கே இவ்வாறான உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்நடவடிக்கையினை ஆரம்பிப் பதற்கு முன்னர் குறித்த செஞ்சிலு வைச் சங்கம் மற்றும் சில அமைப் புக்களும் இணைந்து மேற்படி பகுதிகளிலுள்ள பாதிக்கப்பட்ட குடும் பங்களைப் பார்வையிட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் விபத்துக்கள் அதிகரிக்கும் சாத்தியம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி நகரை அண்டிய பல பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் வீதி விபத்துக்கள் பல இடம்பெறுவதாகத் தெரிவிக கப்படுகிறது.

கிளிநொச்சி டிப்போச் சந்தி, பழைய மருத்துவமனைப் பகுதி போன்ற வீதிப் பகுதிகளிலும் நக ரின் சிறிய வீதிகள் செல்கின்ற பகுதிகளிலும் வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் வீதிகளில் காணப்படும் குன்றுகள், குழிகள் தெரியாமலும் மற்றும் எதிராக வரும் வாகனம் தெரியாமலும் விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இதைவிட பூநகரிச் சந்தி, பரந்தன் சந்தி ஆகிய பகுதிகளிலும் வீதி விளக்குகள் இல்லாமையால் இரவு வேளைகளில் பயணிக்கின்ற பயணிகள் பல்வேறு அசௌகரியங் களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, பரந்தன் நகரில் முல்லை வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு இது வரை மின்சாரம் வழங்கப்பட வில்லை எனவும் தெரிவிக்கப்படு கிறது.

எனவே, இவ்வீதிகளில் மின் விளக்குகளைப் பொருத்தி மக் களின் போக்குவரத்தை இலகு வாக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரி களிடம் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

## காசுக்கான வேலைத்திட்டம் பரந்தனில் ஆரம்பமானது

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பரந்தன் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு காசுக்கான 10 நாள் வேலைத்திட்டம் நடைபெற்று வருகின்றது.

கெயர் நிறுவனத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ் வேலைத்திட்டத்திற்கு மேற்படி கிராமத்திலுள்ள 110 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அக்குடும்பங்களினூடாக இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த 10 நாள் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு வரும் ஒவ்வொரு பயனாளி களுக்கும் நாளொன்றுக்கு தலா 550 ரூபா வழங்கப்படவுள்ளது என மேற்படி வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் கிராம அபிவிருத திச் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (110)

# மாம்பழம் சந்தியில் கடைத்தொகுதியை இடித்துத் தள்ளிய "சொகுசு" பயணிகள் பேருந்து

## பயணிகள் மயிரிழையில் தப்பினர்

(அலுவலக நிருபர்)

கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிவந்த தனியார் பேருந்து ஒன்று நேற்று அதிகாலை கண்டிவீதி மாம்பழம் சந்தியில் கடைத்தொகுதி ஒன்றின்மீது மோதி விபத்துக்குள்ளாகியதில் அதன் ஓட்டுநரும் சில பயணிகளிளும் சிறு காயங்களுக்குள்ளாகியதுடன், பயணிகள் அனைவரும் தெய்வாதீனமாக உயிர தப்பினர். அப்பகுதியில் அமைந்திருந்த நான்கு கடைகள் பகுதியளவில் சேதமடைந்தன. வீட்டின் மதில் ஒன்றும் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த பயணிகள் மற்றும் ஓட்டுநர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று அதிகாலை 6 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தையடுத்து அப்பகுதி மக்கள் மிகவும் அதிர்ச்சியடைநதுள்ளனர். அதிகாலை என்பதால் இப




பகுதியில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. அவ்வாறு இல்லாதிருந்தால் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடுகதி வேகத்தில் கண்டி வீதி வழியாகப் பயணிக்கும் இத்தகைய பஸ் வண்டிகள் குறித்து வீதிக்கு நெருக்கமாகக் குடியிருக்கும் மக்களே இவ்வாறு அச்சம் கொண்டுள்ளனர்.

இச்சம்வம் குறித்து பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணைகளையும் மேற்கொண்டனர். (பா)

# மகிழ்வூட்டல் செயலமர்வு

(பூநகரி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மகிழ்வூட்டல் செயலமர்வு எதிர்வரும் 5, 6 ஆம் திகதிகளிலும், 9, 10 ஆம் திகதிகளிலும் பூநகரி மகாவித தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் பயிற்சி இணைப்பாளர் திருமதி வேணுகா ஜீவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் துறைசார் வளவாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (112)

# வட்டக்கச்சிப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 3 திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வட்டக்கச்சிப் பெரியகுளம் பகுதியில் இரண்டு திருட்டுச் சம்பவங்களில் 10 பவுண் நகைகளும் ரொக்கப் பணமும் திருடப்பட்டுள்ளதாகவும்,

3 ஆவது திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற சமயம் அப்பகுதி மக்கள் கூச்சலிடத் திருடர்கள் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குறித்த பகுதி வீட்டு உரிமையாளர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளுக்கு வலியுறுத்து



(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலக பிரிவிற்கு உப்பட்ட பகுதிகளில் அமைநதுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் என்பவற்றை ஆராய்ந்து நிவர்த்தி செய்வதற்கும் மற்றும் அப்பகுதியில் உள்ள விவசாய சம்மேளனங்களின் பிரச்சினைகள், பொதுமக்களின் மின்சாரப் பிரச்சினை, பிரதேச குறைபாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் வெகுவிரைவில் மேற் கொள்ளப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தினைத் தலைமைதாங்கி நடத்தியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு திணைக்களங்கள் மற்றும் சபைகளின் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்த இவ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகளினாலும் மற்றும் பொதுஅமைப்புக்களினாலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை செவிமடுத்து அலசி ஆராய்ந்த அமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் பிரச்சினைகள் சரியான முறையில் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அவற்றை சீர் செய்யும் வகையில் அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தாமதிக்காது மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அரச நிறுவனங்களின் சேவைகள் காலதாமதமின்றி உரிய நேரத்தில் சென்றடைய வேண்டும். இதனை உயர் அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். (03)

# உயர் தரத்திற்குத் தகுதிபெற்ற மாணவர்கள் விபரங்களைக் கோருகிறது கல்வி அமைச்சு

(அச்சுவேலி)

கடந்த 2009 ஆம் ஆண்டு மூன்றாம் தவணைப் பரீட்சையில் கணித பாடத்தில் 40 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்காக கல்வியமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட விசேட பரீட்சையில் கற்பித்தல் செயற்றிட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் இணைந்து கொண்டவர்களில் 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்திபெற்று உயர்தரத்திற்குத் தகுதி பெற்றிருப்பின் அவர்களது பெயர் விபரங்களை வழங்கியுதவுமாறு கல்வி அமைச்சினால் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இச்செயற்றிட்டத்தில் இணைந்து கொண்ட மாணவர்களில் ஏனைய பாடங்களில் சித்திபெறாது கணித பாடத்தில் மட்டும் சித்தி பெற்றிருப்பின் அம்மாணவர்களில் பெயர் விபரங்களையும் வழங்கியுதவுமாறு பாடசாலைகளுக்கு சுற்று நிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.(03)

# இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழைகாரணமாக தமது நாளாந்த செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

தற்போதைய மாறுபட்ட காலநிலையினால் எந்த நேரத்தில் மழைபொழியுமெனத் தெரியாத நிலை குடாநாட்டிலுள்ளது. இதனால் திட்டமிடப்பட்ட பல சேவைகளை உரிய காலப் பகுதியில் செய்து முடிக்க முடியாத நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மழை வெள்ளம் பல்வேறு இடங்களிலும் தேங்கி நிற்பதனால் கட்டுமானப் பணிகளும் தாமதமடைந்துள்ளன. குறிப்பாக கால்வாய்கள், பாலபுனரமைப்புகள் என்பவற்றை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும்,அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (கா)

# வடமராட்சி வலயமட்டத்திலான தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி வலயமட்டத் தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வடம ராட்சி வலயக் கல்வி அலுவலகத்தி னால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு-

**ஆக்கம் - எழுத்து - பிரிவு - 1**

த.தாரணி (ஞானசாரியார் கல்லூரி), இ.துஷாகரன் (பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்), கி.ரஜிதா (வடஇந்து மகளிர் கல்லூரி).

**கட்டுரை வரைதல் - பிரிவு - 2**

பு.தயாபரன் (ஹாட்லிக் கல்லூரி), பா.அண்டன் டல்சன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி), பி.கேதாரணி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**பிரிவு - 3**

ரவிக்குமார் திருபரன் (ஹாட்லிக் கல்லூரி), சிவகுமார் தனுஷ்குமார் (பொலிகண்டி இ.த.க.பாடசாலை), சி.சிந்துஜா (கரணவாய் ம.வி).

**கட்டுரை வரைதல் - இலக்கியம் நயத்தல**

**பிரிவு - 4**

வா.ஜெயப்பிரசன்னா (ஹாட்லிக் கல்லூரி), ஈ.தர்சினி (விக்னேஸ்வராக் கல்லூரி), இ.ஸ்ரீதிவாகரன் (நெல்லியடி மத்திய ம.வி).

**தமிழியற் கட்டுரை இலக்கியம் நயத்தல்**

**பிரிவு - 5**

லோ.தேனுஷா (விக்கினேஸ்வராக் கல்லூரி), அ.ஆரணி (வட இந்து மகளிர் கல்லூரி), இ.கார்த்திகா (வல்வை மகளிர் ம.வி).

**இலக்கணப் போட்டி - பிரிவு - 4**

க.கீதாஞ்சனா (வட இந்து மகளிர் கல்லூரி), க.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி), தெ.நிரூபன் (வல்வெட்டி இ.த.க. பாடசாலை).

**பிரிவு - 5**

ஸ்ரீ.சத்தியா (வட இந்து மகளிர் கல்லூரி), பா.அபிராமி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பா.சந்திரிகா (தேவரையாளி இந்துக் கல்லூரி).

**திறனாய்வுப் போட்டி**

**பிரிவு - 5**

ஜெ.ஜெசிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பு.ஆரத்தியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சு.ஜெகதீபன் (வேலாயுதம் மகா வித்தியாலயம்).

**குறுநாடகப் போட்டி ஆக்கம் - பிரிவு - 4**

ஸ்ரீ.கார்த்திகா (நெல்லியடி மத்திய ம.வி), க.அஜித்குமார் (செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை), செ.மனோஜா (தும்பளை சிவப்பிரகாச ம.வி).

**பிரிவு - 5**

இ.மைதிலி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சௌ.பிரேமதர்சினி (விக்னேஸ்வராக் கல்லூரி), அ.நிஷாந்தினி (விக்னேஸ்வராக் கல்லூரி).

**கவிதை ஆக்கம் - பிரிவு - 4**

தி.சுவஸ்திகா (புலோலி மெ.மி.த.க.பா), கு.சுரேன் (ஹாட்லிக் கல்லூரி), த.கிருஸ்ஷிகா (வடஇந்து மகளிர் கல்லூரி).

**பிரிவு - 5**

வி.கலைவாணி (நெல்லியடி ம.ம.வி), ம.கிருத்திகா (வல்வை மகளிர் ம.வி), க.பிரசாந் (ஹாட்லிக் கல்லூரி), வி.வைதேகி (வட இந்து மகளிர் கல்லூரி) (இருவர் மூன்றாமிடம்).

**சிறுகதை ஆக்கம் - பிரிவு - 4**

க.செந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி), ம.சாருஜா (வடஇந்து மகளிர் கல்லூரி), இ.லக்ஷியா (வல்வை மகளிர் ம.வி).

**பிரிவு - 5**

பி.பிரதீபா (சிதம்பராக் கல்லூரி), ம.மிதுஷா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), நே.ஆர்த்தியா (நெல்லியடி மத்திய ம.வி).

இவ்வலய மட்டத்தில் முதலிடம் பெற்ற போட்டியாளர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள மாவட்டமட்ட எழுத்தாக்கப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

# எமது தனித்துவமான பாரம்பரியங்களை பேணிப் பாதுகாக்கும் கடமை எமக்குண்டு



(அச்சுவேலி)

எமது பாரம்பரிய தமிழ்க் கலைகள் நம் மண்ணில் நிலைத்திருக்கும் வரையில் அவை தமிழர் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் என்றும் பறைசாற்றிக் கொண்டே இருக்கும்.

அதுமட்டுமன்றி நமது முன்னோர்கள் கலைகளுக்காகவும், கலைத்திறன்களுக்காகவும் ஆற்றி வந்த அரும்பணிகளும் வெளிக்கொணரப்படுகின்றது. கலைகள் பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்தவை.

ஆகையினால்தான் கலைகள் அழிவடையும் போது பண்பாடுகளும் அழிவடைய நேரிடுகின்றது என வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தெரிவித்துள்ளார்.

அண்மையில் கோப்பாயில் நடைபெற்ற பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் கலைபண்பாட்டு விழாவில் உரையாற்றும்போது இதைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றியதாவது-

கலை வடிவங்கள் காலத்திற்குக் காலம் மாறுபட்டுச் சென்றாலும் ஒரு இனத்தின் பண்பாடு மாறுபடுவதில்லை. அதற்கு எடுத்துக்காட்டாக எமது தமிழ்ப் பாரம பரியங்கள் இன்று வரைக்கும் சான்றாக உள்ளன.

அன்னிய தேசத்தவர்களின் அளவுக்கதிகமான வருகையும், அயல்நாட்டு மோகங்களும் நம்மவர் மத்தியில் ஊடுருவத் தொடங்கியுள்ள போதிலும், நமது கலைகளையும் பண்பாடையும் மாசுபடாத வகையில் கட்டிக்காத்துப் பேண வேண்டியது எங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

இன்று நமது இனத்தின் தனித்துவத்தைச் சீரழிக்கும் வகையில் நாகரிகங்களின் கலப்படம் தாராளமாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால், நாம் எல்லோரும் இதை ஓர் சவாலாக எடுத்து, எமது தனித்துவமான பாரம்பரியத்தையும், கலைகளையும் என்றும் புனிதத்துடன் பேண முன்வர வேண்டும் என்றார். (03)

# கைவிடப்பட்டுள்ள கால்நடைகளை உரியவரிடம் ஒப்படைக்க புதிய திட்டம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கைவிடப்பட்ட கால்நடைகளைப் பிடித்து, அவற்றை உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதற்கான புதிய வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் இவ் வேலைத்திட்டம், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலுள்ள அந்தந்தப் பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கங்களினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கைவிடப்பட்ட கால்நடை ஒன்றுக்கு 100 ரூபா செலுத்தி அதனைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், கால்நடையின் காதில் இலக்கமிடுதல், தடுப்பு மருந்து ஏற்றுதல் போன்றன இலவசமாகத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் எனவும், மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள கால்நடை திணைக்களத்துடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (110)

# வாதரவத்தைக்கான பஸ் சேவையை ஆரம்பிக்க அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(அச்சுவேலி)

நீண்டகாலமாகப் போக்குவரத்து வசதிகள் அற்றிருக்கும் வாதரவத்தைக் கிராமத்திற்கு உடனடியாக பஸ் போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கோப்பாய் பிரதேச செயலகத்தில் அமைச்சர் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வலி. கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தின்போது வாதரவத்தைப் பிரதேச பிரதிநிதிகளின் மூலம் அமைச்சரிடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே அமைச்சர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த போக்குவரத்துச் சபை அதிகாரிக்கு அப்பணிப்புரையை வழங்கியுள்ளார். அமைச்சரின் பணிப்புரையினை அடுத்து, அதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாகப் போக்குவரத்து வசதிகள் அற்றிருக்கும் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வாழும் அக்கிராமத்திற்குப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படுவதனால், மக்கள் பெரும் பயன் அடைவர் எனத் தெரிவிக்கும் மக்கள், அமைச்சரின் இம்முயற்சிக்குத் தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றனர். (03)

# பிறந்து ஒருநாளான 2 சிசுக்களின் சடலங்கள் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

பிறந்து இறந்த ஒருநாள் சிசுக்களின் சடலங்கள் இரண்டு யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் பணிப்பில் பரிசோதனைக்காக நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

சுன்னாகம் பகுதியிலிருந்து ஒரு சிசுவும், அல்வாய்ப் பகுதியிலிருந்து மற்றைய சிசுவும் யாழ். போதனா வைத்தியசாலையில் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி விசாரணையை மேற்கொண்டுள்ளார். (பா)

# வடமாகாண கல்வி வலயத்தின் பணிப்பாளர்களுக்கான கருத்தரங்கு

(பருத்தித்துறை)

வடமாகாணத்திலுள்ள 12 வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மத்திய கல்வி அமைச்சின் பரீட்சை திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களின் நன்மை கருதி, பரீட்சைத் திணைக்களத்தால் அச்சிடப்பட்ட மாதிரி வினாத்தாள் தயாரிக்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் வழங்கப்படவுள்ளது.

இதில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் மாகாண முதலமைச்சர் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இவ்வைபவத்தில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் ஏச்.எம்.குணசேகர அறிவித்துள்ளார். (109)

# அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றுவதால் மூச்சுவிட முடியாமல் திணறும் பயணிகள்

(முல்லைத்தீவு)

கிளிநொச்சிப் பகுதியில் தனியார் பேருந்துகள் அளவுக்கு அதிகமான மக்களை ஏற்றுவதால், தாம் பெரும் நெருசலுக்கு மத்தியில் பயணம் செய்யவேண்டியுள்ளதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பஸ் நடத்துநரின் உதவியாளரிடம் கூறினால் அவர் தங்களுடன் முரண்படுவதாகவும், தங்களை ஏசுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பேருந்துகள் அதிகளவான மக்களை ஏற்றி நெரிசலை ஏற்படுத்துவதால் அதில் பயணம் செய்யும் முதியவர்கள், சிறுவர்கள் மூச்சுவிட முடியாமல் பெரும் அவஸ்தைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் பேருந்துகளில் எத்தனை பேரை ஏற்ற வேண்டும் என வரைமுறை உள்ளபோதும், அவற்றைக் கவனத்தில் கொள்ளாது பஸ் நடத்துநர்கள் இவ்வாறு செயற்படுவது கண்டிக்கத்தக்க விடயம் எனப் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (40)

# சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்கப்பட்டது

(தும்பளை)

தும்பளை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அதன் அங்கத்தவர்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தொழில் முயற்சித் தேவைகளுக்காக ஏழு அங்கத்தவர்களுக்கு இக்கடன் தொகை வழங்கப்பட்டதுடன், இருபதாயிரம், பத்தாயிரம் என்ற தொகையில் இக்கடன்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் தலைவர் இ.அன்ரனி, செயலாளர் சி.மார்க்கண்டு, பொருளாளர் மா.கண்ணதாசன் ஆகியோர் முன்னிலையில் வைத்து இக்கடன் தொகை வழங்கப்பட்டது. (மா)



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் ஏற்பாட்டில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பத் தலைவி ஒருவருக்கு ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தையல் இயந்திரம் வழங்குவதைக் காணலாம்.

# நேரம் காட்டும் மணிக்கூடும் பழுதடைந்துள்ள கோபுரமும்

(குருநகர்)

நகரில் ஓடாமல் நின்ற மணிக்கூடு ஓடத் தொடங்கியுள்ளது. யாழ். நகர் ஆஸ்பத்திரி வீதி கோபுர மணிக்கூடுகள் நேரம் காட்டத் தொடங்கியுள்ளன.

ஒரு மாதத்திற்கு மேலாகியும் பழமை வாய்ந்த மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகள் நான்கும் இந்தச் செய்தியை எழுதப்படும்வரை திருத்தப்படாமலே இருந்து வருகின்றன. (68)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(04.05.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
சித்திரை 21 ஆம் நாள்.
இராகுகாலம் 11.5G–1.2G, சுபநேரம் 4.2G –5.5G,
நட்சத்திரம் கார்த்திகை முழுவதும்
திதி: பிரதமை பி.ப.2.13 வரை
கார்த்திகை விரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– காரிய சித்தி. பண வரவு, நல்ல செய்தி.

ரிஷபம்:– மன மகிழ்ச்சி, தேக சுகம், பாராட்டு, கலகம்.

மிதுனம் :– காரிய ஜெயம், மன மகிழ்ச்சி, பண வரவு, நிம்மதி.

கடகம்:– வீண் செலவு, சினத்தல், கலகம், மனக்குழப்பம்.

சிம்மம்:– நல்ல செய்தி, மன நிம்மதி, பண வரவு, பாராட்டு.

கன்னி :– வீண் பேச்சு, விதண்டாவாதம், மனக் குழப்பம், கலகம்.

துலாம் :– நற்போசனம், நண்பர் உதவி, பண வரவு, நிம்மதி.

விருச்சிகம்:– கடின வேலை, பண வரவு, மன நிம்மதி, பாராட்டு.

தனுசு:– நண்பர் உதவி, வீண் பயம், பொருள் இழப்பு, கலகம்.

மகரம்:– யோசனை மிகுதி, வீண் செலவு, காரியத்தடை, கவலை.

கும்பம் :– தேக சுகம், மன மகிழ்ச்சி, பண வரவு, நிம்மதி.

மீனம்:– காரிய ஜெயம், மன நிம்மதி, செலவு, வீண் கவலை.

# நல்லிணக்க ஆணைக்குழுவால் மீண்டும் சாட்சியங்கள் பதிவு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மீண்டும் பொதுமக்களின் சாட்சியங்களை பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்கிணங்க இன்றைய தினம் மொரட்டுவை பல்கலைக்கழக கணனி விஞ்ஞான மற்றும் பொறியியல் திணைக்கள சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சதுர டி சில்வா சனல் - 4 வீடியோ தொடர்பாக சாட்சியமளிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்துடன் பொதுமக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை நிறைவு செய்ததுடன் இறுதி அறிக்கை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வந்தன.

எதிர்வரும் மே 15ஆம் திகதி நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில், ஆணைக்குழுவின் பதவிக் காலம் மேலும் ஆறு மாதங்கள் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் அழிவு; பின்லேடனின் மரணம் இரண்டிற்கும் வேறுபாடு எதுவும் இல்லை

## என்கிறார் அமைச்சர் குணசேகர



(கொழும்பு)

பின்லேடனின் மரணத்தின் பின்னர் அமெரிக்கர்கள் கொண்டாடும் மகிழ்ச்சிக்கும், நந்திக்கடலில் புலிகளின் அழிவுக்குப் பின்னர் இலங்கையில் நடத்தப்பட்ட மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களுக்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் காண முடியவில்லை என்று அமைச்சரும், கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலருமான டியு. குணசேகர தெரிவித்துள்ளார்.

பின்லேடனின் மரணத்துக்குப் பின்னர் அமெரிக்கர்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவது குறித்துக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

புலிகளுக்கு எதிரான போரின் வெற்றியைக் கொண்டாடிய இலங்கையை இகழ்ந்தவர்கள், இப்போது பின்லேடனின் மரணத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்.

அல்கொய்தாவைத் தோற்கடிக்கும் அமெரிக்காவின் நடவடிக்கையில் பின்லேடனின் மரணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார்.

ஆனால் அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் போர்முனையில் பிரபாகரனும் அவரது தளபதிகளும் இல்லாதொழிக்கப்பட்ட வெற்றியை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.


அதேவேளை, பின்லேடனை அமெரிக்கா கொன்றதைப் பாராட்டியுள்ள ஜாதிக ஹெல உறுமய, இதற்காக அமெரிக்கர்கள் எப்படி மகிழ்ச்சி கொள்கின்றனரோ அதுபோலவே தாமும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மகிழ்ச்சிக் கூத்தாடியதாக கூறியுள்ளது.

இலங்கை 2009 இல் பெற்ற வெற்றியை அமெரிக்கா மதிக்க வேண்டும் என்றும் ஜாதிக ஹெல உறுமய கேட்டுக் கொண்டுள்ளது.

மீளவும் புலிகளுக்கு உயிர் கொடுக்க அமெரிக்கா முனைவதைக் கண்டிப்பதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மனிதாபிமான முறையில் நடத்தப்பட்டயுத்தம் உண்மையை சர்வதேசத்திற்கு உணர்த்தவேண்டும்

## தூதுவர் தயான் ஜயதிலக ஆலோசனை



(கொழும்பு)

**புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது மனிதாபிமான முறையில் பொதுமக்களுக்கு தீங்கிழைக்காத வகையில் நாம் எவ்விதம் மிகவும் அவதானமாக யுத்தத்தை நடத்தினோம் என்ற உண்மையை உலகிற்கு எடுத்துரைப்பதே நாம் இன்று எடுக்க வேண்டிய ஒரு விவேகமான ராஜதந்திர ரீதியான கொள்கையாக அமைய வேண்டுமென பிரான்ஸ் நாட்டின இலங்கைக்கான தூதுவர கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.**

இவ்விதம் ஒரு சிலர் சர்வதேச ரீதியில் இலங்கையின் நற்பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சியை வெற்றிகரமாக முறியடிக்க வேண்டுமாயின் எங்கள் நாட்டில் உள்ள சகல இன மக்களிடையில் இருந்து வரும் சிறிய கருத்து மோதல்களைக் கூட சமரசமாக தீர்த்து வைப்பதுடன் அரசியல் தலைவர்களும் இன, பேதங்களை மறந்து இலங்கையர் என்ற ஒரே குரலில், தருஸ்மன் அறிக்கை ஆதாரமற்றது, வேண்டுமென்றே ஒரு சில சக்திகளின் பெயரில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை உலக நாடுகளுக்கு ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்ட வேண்டும் என்றும் கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

எங்கள் எதிரிகள் விரித்துள்ள வலையில் சிக்கி, அவர்களின் எண்ணங்கள் வெற்றியடைய இடமளிக்காத வகையில் முன்யோசனையுடன் மதிநுட்பமாக நாம் நடந்து கொள்ள வேண்டும், 1983 இல் ஏற்பட்டது போன்று இன்னுமொரு ஆபத்தை எங்கள் நாட்டிற்கு ஏற்படுத்தி எமது பொருளாதார வளர்ச்சியை பின்னடையச் செய்யலாகாது.

புலம்பெயர்ந்த தமிழர் இயக்கங்களும், இலங்கைக்கு எதிராக சதித்திட்டம் வகுத்து செயற்படும் வெளிநாட்டுச் சக்திகளும், இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை முறியடித்து, அடைந்த வெற்றியை சீர்குலைத்து, நாம் மனித உரிமைகளை கடைப்பிடிக்கத் தவறிவிட்டோம் என்ற கருத்தை உலகிற்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றன.

நாம் ஆத்திரப்படாமல் உண்மையை வெளிநாடுகளுக்கு ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டுவதற்கு பதிலாக ஆவேசமாக பொது மேடைகளில் பேசுவதனால் எங்கள் நாட்டிற்கு அத்தகைய முயற்சிகள் தீமையைத் தவிர நன்மையைப் பெற்றுக்கொடுக்க முடியாது என்ற யதார்த்தத்தையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் யூன் மாதம் நடைபெறுமென அறிவிப்பு

(கொழும்பு)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி, பிழையான வேட்புமனுத்தாக்கல் தொடர்பாக நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்பட்ட வழக்குத் தாக்கல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், எதிர்வரும் ஜூன் மாதம் வரையில் மீளவும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எஞ்சிய 70 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த மாதத்தில் தேர்தல்களை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தாகவும், தற்போது அந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வெசாக், பௌர்ணமி மற்றும் 2600 பௌத்த ஜயந்தி போன்ற நிகழ்வுகள் இந்த மாதத்தில் அமைந்துள்ளதனால் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நிலைமைகளை உன்னிப்பாக



அவதானித்ததன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல்களை ஜூன் மாத நடுப்பகுதியில் நடாத்துமாறு உத்தரவிட்டதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் தினம் நடைபெறவுள்ள திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# செய்தி இணையத்தளம் தொடர்பாக புதிய சட்டங்களை அமுலாக்கவில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

செய்தி இணையத் தளங்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

செய்தி இணையத் தளங்கள் தொடரபில் புதிய சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்படும் என அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், இவ்வாறு புதிய சட்டங்கள் எதனையும் அறிமுகப்படுத்தும் உத்தேசம் கிடையாது என இலங்கை தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையிலேயே லங்கா ஈ நியூஸ் இணைய தளம் முடக்கப்பட்டதாக இலங்கை தொலைதொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மாத்திரம் இணைய தளங்கள் மீது தடைகள் விதிக்கப்படுமே தவிர புதிய சட்டங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இணைய தளங்கள் தொடர்பில் ஊடக மற்றும் தொடர்பாடல் அமைச்சினால் மட்டுமே புதிய சட்ட விதிகளை அமுல்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்

## நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பாக சர்வதேசத்திற்கு விளக்க முடிவு

(கொழும்பு)


இலங்கையில் இடம்பெற்றதாக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நாவின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பாக ராஜதந்திரிகள் மூலம் உலகநாடுகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் தொடர்பு ஆணையாளர் சரத் திஸநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக வெளிநாடுகளில் கடமையாற்றி வரும் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு முதலில் விளக்கமளிக்கப்படவுள்ளது. இதன் பின்னர் ராஜதந்திரிகளின் ஊடாக வெளிநாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கையை வெளிவிவகார அமைச்சே மேற்கொள்ளஉள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




## புனே அணியில்




(புனே)

நான்காவது ஐ.பி.எல். தொடரில் புனே அணியில் விளையாடும் வாய்ப்பு கங்குலிக்கு கிடைத்துள்ளது.

நான்காவது ஐ.பி.எல். ஏலத்தின் போது எல்லா அணிகளாலும் புறக்கணிக்கப்பட்டார். சௌரவ் கங்குலி. அவருடைய ஐ.பி.எல். சகாப்தம் முடிந்துவிட்டதாகவே அனைவரும் கருதினர். ஆனால் தற்போது மீண்டும் கங்குலிக்கு ஐ.பி.எல்.இல் விளையாடுவதற்கான அழைப்பு வந்துள்ளது. புனே வாரியர்ஸ் அணியின் உரிமையாளர்கள் முன்னாள் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணித் தலைவரான கங்குலிக்கு அழைப்பு விடுத்துள்ளனர். அந்த அணியின் சார்பில் கங்குலியைத் தொடர்பு கொண்டு பேசியுள்ளனர். காயமடைந்த ஆசிஷ் நெஹ்ராவுக்குப் பதிலாக கங்குலி சேர்க்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்று இரவே அவர் அணியில் இடம்பெற வாய்ப்பு உள்ளது என்றும், நேற்றே அவர் அணியில் இணைவதுடன் யுவராஜ் சிங் தலைமையில் விளையாடுவார் என்று எதிர்பார்ப்பதாகவும் அணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ஐ.பி.எல். தொடரின் 4 போட்டிகளில் தொடர்ச்சியாக 6 தோல்விகளைச் சந்தித்து துவண்டு போயிருக்கும் புனே அணிக்கு அனுபவம் மிக்க கங்குலி சில வழிகாட்டுதல்களைத் தருவார் என்று நம்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## ஓய்வை அறிவிக்குமாறு நிர்ப்பந்தம்



(பிரிஜ்டவுன்)

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவிக்க வேண்டுமென்று தன்னை மேற்கிந்தியத் தீவுகள் அணித் தேர்வாளர்கள் கட்டாயப்படுத்தினார்கள் என்று அந்த அணியின் மூத்த வீரர் சிவநாரயணன் சந்தபால் தெரிவித்தார்.

இது தொடர்பாக அந்நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் ஏர்னஸ்ட் ஹிலாரிக்கு அவர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், உலகக் கிண்ணக் கிரிக்கெட் முடிந்த உடனேயே கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துவிடுங்கள் என்று அணியின் தேர்வாளர்கள் என்னைக் கட்டாயப்படுத்தினர். ஆனால் அவ்வாறு அறிவிக்க முடியாது என்றவுடன் அவர்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தனர். இப்போது பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் என்னை அணியில் சேர்க்கவில்லை.

கடந்த ஓராண்டாக அணிக்காக நான் எதையும் செய்யவில்லை. இதுவே என்னைத் தேர்வு செய்யாததற்குக் காரணம் என்று பயிற்சியாளர் கூறியுள்ளார். ஆனால், உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் விளையாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணியில் பங்கேற்ற வீரர்களில் சராசரியாக அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் மூன்றாவது இடத்தில் உள்ளேன். அப்படியிருக்கும் போது என்னை ஏன் அணியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்றுள்ளது.

## இன்று ஆரம்பம்

(தெல்லிப்பளை)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி இன்றும் நாளையும் யாழ். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்று ஆண்களுக்கான போட்டியும், நாளை பெண்களுக்கான போட்டியும் இடம்பெறவுள்ளதுடன், இதில் ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து வலயங்களிலிருந்தும் மூன்று பாடசாலைகள் வீதம் 15 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

போட்டியாளர்கள் போட்டிக்குரிய சீருடையை அணிந்து வருமாறு யாழ். மாவட்ட விளையாட்டுக்குழுத் தலைவரும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளருமான ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதலிடத்தைப் பெறும் பாடசாலைகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகும். (44)

## மேசைப்பந்துப் போட்டி

(தெல்லிப்பளை)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டியில் 19 வயது இருபாலருக்குமான ஆட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் இரண்டு பிரிவிலும் 11 அணிகள் போட்டியில் பங்குபற்றவுள்ளன. போட்டியாளர்கள் போட்டிக்குரிய சீருடையை அணிந்து வருமாறு யாழ். மாவட்ட விளையாட்டுக்குழுத் தலைவர் அறிவித்துள்ளார். (44)

## கிராமம் நோக்கிய பயணம் வெற்றி

(கொழும்பு)

நகரத்திலிருந்து கிராமத்திற்கு கிரிக்கெட் விளையாட்டை எடுத்துச் சென்றதன் நோக்கம் வெற்றியளித்துள்ளதாக இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.டி.எம்.ரவூப் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் போன்ற நகரப் பகுதியிலுள்ள குறிப்பிட்ட பாடசாலைகளில் மட்டுமே அன்று கிரிக்கெட் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலை மாறி கிராமப்புறம் கிரிக்கெட்டில் முன்னிலை வகிக்கிறது.

இன்று கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்தே அதிகமான வீரர்கள் உருவாகியுள்ளனர். அந்த வகையில் கிராமத்திற்கு விளையாட்டைக் கொண்டு செல்லும் திட்டத்தில் நாம் வெற்றி அடைந்துள்ளோம் என்றார்.

## நாடு திரும்புகிறார்



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பெங்களூர் அணிக்காக விளையாடி வரும் இலங்கை வீரர் டில்சான் மே 11ஆம் திகதியன்று நாடு திரும்புகிறார்.

இலங்கை அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அவர், இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் கலந்து கொள்ள இருக்கிறார். இதனால் பெங்களூர் அணிக்காக கடைசி 4 லீக் ஆட்டங்களிலும், அடுத்த சுற்று ஆட்டங்களி லும் அவர் கலந்துகொள்ளமாட்டார்.

அவர் இலங்கை அணிக்கு திரும்பும் தகவலை கிரிக்கெட் சபைச் செயலர் நிஷாந்தா ரணதுங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபையுடன் பேசி முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக இதுவரை 7 ஆட்டங்களில் விளையாடியுள்ள டில்சான் 120 ஓட்டங்களையே எடுத்துள்ளார். ஐ.பி.எல்-இல் பங்கேற்றுள்ள இலங்கை வீரர்களில் ஐந்து பேர் இடையிலேயே திரும்புகின்றனர்.

## மேலும் வழிமுறைகளைத் தேடவேண்டும்



(கராச்சி)

கிரிக்கெட்டில் ஆட்ட நிர்ணயச் சதியைத் தடுக்க சர்வதேச கிரிக்கெட் சபை மேலும் பல புதிய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கிரிக்கெட்டில் சூதாட்டம் நடைபெறுகிறது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியாது. ஆனால் சூதாட்டத்தில் ஈடுபடுவர்களை முழுமையாகக் கட்டுப்படுத்தவும் முடியாது. இது போன்ற நிகழ்வுகளைத் தடுக்க புதிய நடைமுறைகள் தேவை. எனவே சர்வதேச கிரிக்கெட் சபை இந்த விடயத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பித்த பின்னர் பல சிறந்த வீரர்களை அடையாளம் காண முடிந்துள்ளது. இந்தியாவில் கிரிக்கெட்டுக்கு சிறப்பான எதிர்காலம் உள்ளது. ஆனால் பாகிஸ்தானைப் பொறுத்த அளவில் கிரிக்கெட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்த வேண்டியுள்ளது. தங்களுக்கு வேண்டியவர்களைத் தேர்வு செய்வது, பரிந்துரைகள் ஏற்கப்படுவது போன்றவை பாகிஸ்தான் கிரிக்கெட்டில் கீழ் மட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரையுள்ளது. நிர்வாகத்தை சீர்படுத்துவது, திறமையான வீரர்களை மட்டும் தேர்வு செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால், பாகிஸ்தான் அணி உலகின் தலைசிறந்த அணியாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றார்.

## ஒரு ஓட்டத்தால் மேற்கிந்தியத்தீவு அணி வெற்றி



(பிரிஜ்டவுன்)

பாகிஸ்தானுக்கு எதிரான நான்காவது போட்டியில் டக்வெத் லூயிஸ் முறைப்படி மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு ஓட்டத்தினால் வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி நேற்று முன்தினம் பிரிஜ்டவுன் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் ஹபீஸ் 121, அசாத் சாபிஜா 71 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிசோ மூன்று, றோச், டி.ஜே. பிராவோ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 249 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, 29.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், போட்டி தடைப்பட்டது. இதன் காரணமாக டக்வெத் லூயிஸ் முறைப்படி ஒரு ஓட்டத்தினால் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதில் எல்.எம்.பி. சிமென்ஸ் 76, டி.எம். பிராவோ 21, சர்வான் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கான் இரண்டு, மொகமட் ஹபீஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மொகமட் ஹபீஸ் தெரிவானார்.

ஏற்கனவே தொடரை வென்ற நிலையில், பாகிஸ்தான் அணி 3-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான ஒரு நாள் போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விரைவில் மீண்டு வருவேன்



(புதுடில்லி)

கைவிரல் காயத்தில் இருந்து விரைவில் மீண்டு வருவேன். மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான தொடருக்கு முன்பாக தயாராகி விடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என, வேகப்பந்து வீச்சாளர் ஆஷிஸ் நெஹ்ரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:


ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்க முடியாமல் போனது வருத்தம் தான். என்னைத் தேர்வு செய்த புனே அணிக்காக, திறமையை வெளிப்படுத்த முடியாமல் போனது ஏமாற்றமாக உள்ளது. ஆனால், காயம் எப்போது, யாருக்கு ஏற்படும் என்பதெல்லாம், முன்னதாகக் கணிக்க முடியாது. தவிர, இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றதை, ஓய்வறையில் இருந்தபடி பார்த்துக்கொண்டிருந்தது மிகவும் சிரமமாக இருந்தது. போட்டியில் பங்கேற்க முடியவில்லை என்றாலும், அணி சம்பியன் பட்டம் வென்றது மகிழ்ச்சியாக இருந்தது.

தற்போது களத்தடுப்பு, துடுப்பாட்டம் செய்வதில் சிக்கல் தொடர்கிறது. ஏனெனில், காயமடைந்த விரலில் இன்னும் சிறிய வலி உள்ளது. இந்நிலையில், எஞ்சிய ஐ.பி.எல்., போட்டிகளில் பங்கேற்பது என்ற கேள்வியே தேவையில்லாதது. முதலில் காயத்தில் இருந்து, முழுமையாக மீண்டு வருவது தான் முக்கியம்.

டாக்டர்கள் முன்னிலையில் பெங்களூரில் பயிற்சியில் ஈடுபட உள்ளேன். இதில் உடற் தகுதி பெறும் பட்சத்தில், இதற்கான சான்றிதழை, மேற்கிந்தியத்தீவுத் தொடருக்கு முன்பாக, கிரிக்கெட் சபையிடம் சமர்ப்பிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. இதன் மூலத் மேற்கிந்தியத்தீவுத் தொடரில் விளையாடுவேன் என்றார்.

# குறித்த நேரத்தில் அடக்கம் செய்ததாலேயே பின்டேலன் உடல் கடலில் மூழ்கடிக்கப்பட்டது

## அமெரிக்க அரசு விளக்கம்



(வொஷிங்டன்)

சுட்டுக்கொல்லப்பட்ட பின்லேடனின் உடல், இஸ்லாமிய மதச்சடங்குகளுக்குப் பிறகு கடலில் மூழ்கடிக்கப்பட்டது. இதை வெள்ளை மாளிகையில் உள்ள அமெரிக்க பாதுகாப்புக்கான துணை ஆலோசகர் ஜோன் பிரனான் தெரிவித்தார்.

கடலில் புதைக்கப்படுவதுதான் மிகச்சிறந்த வழி என்பதால், இதைக் கடைப்பிடித்ததாக அவர் கூறினார். இந்தச் சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்பதைக் குறிப்பிட அவர் மறுத்து விட்டார். மூத்த ராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில் - மேற்கு அரேபிய கடலில் இருந்த அமெரிக்காவின் கார்ல் வின்சன் கப்பலின் மேல் தளத்தில் பின்லேடனின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றதாகத் தெரிவித்தார்.

அமெரிக்க நேரப்படி காலை 1.10 மணிக்குத் தொடங்கி 2 மணிக்கு மதச் சடங்குகள் முடிந்ததாகத் தெரிவித்தார். மதச்சடங்குகள் ஆரம்பிக்கும் முன், பின்லேடனின் உடல் கழுவப்பட்டு வெள் ளைத்துணியால் சுற்றப்பட்டிருந்தது. பிறகு உடல் மிகவும் தடித்தான பை ஒன்றினுள் வைக்கப்பட்டு, கயிற்றால் கட்டப்பட்டது.

ராணுவ அதிகாரி ஒருவர் இஸ்லாமிய மதத்தின் குறிப்புகளை வாசித்தார். அதை அரேபிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் அரேபிய மொழியில், மொழிபெயர்த்தார். இதன் பிறகு பின்லேடனின் உடல், கடினமான பலகையில் வைத்து தண் ணீருக்குள் மூழ்கடிக்கப்பட்டது.

இஸ்லாமிய மத வழக்கப்படி யாரேனும் இறந்தவிட்டால், 24 மணி நேரத்துக்குள் அடக்கம் செய்ய வேண்டும். எனவே பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட 24 மணி நேரத்துக்குள் இஸ்லாமிய மதச் சம்பிரதாயங்கள் அனைத்தும் கடைப் பிடிக்கப்பட்டு, அடக்கம் நடைபெற்றதாக பாதுகாப்புக்கான துணை ஆலோசகர் ஜோன் பிரென்னான் தெரிவித்தார்.

இறந்த ஒருவரின் உடலை 24 மணி நேரத்துக்குள் புதைக்க வேண்டும் என்று இஸ்லாமிய கோட்பாடு கூறுவதால், வேறு நாட்டுக்கு அந்த உடலைக் கொண்டு சென்று, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, மதச்சடங்குகள் செய்து குறிப்பிட்ட நேரத்துக்குள் அடக்கம் செய்ய முடியாது என்பதால், கடலில் அடக்கம் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்

# மனித கேடயமாக மனைவி

(வொஷிங்டன்)


அபோதாபாத்தில் நடந்த 40 நிமிட சண்டையின் முடிவில் கொல்லப்பட்ட ஒசாமா, இறுதி நிமிடங்களில் தனது மனைவியை மனித கேடயமாக பயன்படுத்தியதாகப் பயங்கரவாத தடுப்பு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு அதிகாரி ஜோன் பிரன்னன் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒசாமாவைப் பாதுகாக்க முயற்சித்த 2 பேரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார். கடைசியாக ஒசாமா தனது மனைவியை மனித கேடயமாக பயன்படுத்தியபோது தான் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றார்.




# பயணம் உறுதியாகவில்லை

(வொஷிங்டன்)



அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இந்த ஆண்டு இறுதியில் பாகிஸ்தான் செல்வது இன்னும் உறுதியாகவில்லை என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. கடந்த நவம்பரில் இந்தியா வருவதற்கு முன்பு பாகிஸ்தானுக்கு இந்த ஆண்டு இறுதியில் பயணம் செய்யவிருப்பதாக அறிவித்தி ருந்தார். அதற்கு முன்னதாக பாகிஸ்தான் அதிபர் சர்தாரியும் வெள்ளை மாளிகைக்கு வருவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இரண்டு தலைவர்களின் பயணம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை.

ஒபாமாவின் பாகிஸ்தான் பயணம் குறித்துக் கருத்து தெரிவித்த தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் ஜோன் பிரன்னன், அதிபரின் பயணத்திட்டம் குறித்து என்னால் எதுவும் கூறமுடியாது. அவரது பயணம் பல்வேறு சூழ்நிலைகளைப் பொறுத்தது என்றார்.

# பாகிஸ்தான் முதல் எதிரி தலிபான்கள் அறிவிப்பு

(வொஷிங்டன்)

பின்லேடன் திடீரெனக் கொல்லப்பட்ட சம்பவம் அல்கொய்தா, தலிபான் தீவிரவாதிகளிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதால் தலிபான்கள் ஆவேசம் அடைந்துள்ளனர்.

தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் அசனுல்லா அசன் நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் பத்திரிகை அலுவலகங்களை தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் பின்லேடன் கொல்லப்பட்டதை உறுதிப் படுத்தினார்.

அவர் மேலும் கூறியதாவது -

பின்லேடன் மரணத்துக்கு நிச்சயம் நாங்கள் பழிக்குப்பழி வாங்குவோம். அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்துவோம்.

பாகிஸ்தான் இனி எங்களின் முதல் எதிரி நாடாகும். அமெரிக்கா இரண்டாவது எதிரி நாடாகும். இரு நாடுகளுக்கும் பாடம் புகட்டுவோம்.

பாகிஸ்தான் தலைவர்களும், பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளும் எங்கள் கொலைப்பட்டியலில் உள்ளனர். அதில் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி முதல் இடத்தில் உள்ளார். விரைவில் அவரைக் கொல்வோம் 2007 ஆம் ஆண்டு பெனாசிர் பூட்டோவை கொல்லத் திட்டமிட்டோம்.

தற்கொலைப் படையை அனுப்பி மூன்றே மாதத்தில் அவரைக் கொலை செய்தோம்.

ஆனால் அமெரிக்காவால் 10 ஆண்டுகள் போராடிய பிறகு தான் எங்கள் தலைவரை கொல்ல முடிந்தது. எனவே இதைக் கொண்டாடக்கூடாது என அவர் தெரிவித்தார்.

# இரட்டை வேடம் போடும் பாகிஸ்தான்

## அமெரிக்க அரசாங்கம் குற்றச்சாட்டு

(வொஷிங்டன் )

பாகிஸ்தான் பயங்கரவாதத்தைத் தடுக்க ஒத்துழைப்பு நல்குவோம் என உலக அரங்கில் கூறி விட்டு, அந் தரங்கத்தில் ஒசாமாவுக்கு மறைமுக பாதுகாப்பு அளித்து இரட்டை வேடம் போட்டுள்ளதாக அமெரிக்க சட்ட வல்லுநர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து 120 கி.மீ. தொலைவில் தான் இருக்கிறது அபோதாபாத்.

அபோதாபாத்தில் 1 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்ட பிரமாண்ட மாளிகையில் ஒசாமா பின்லேடன் 5 ஆண்டு காலம் சுகவாசமாக இருந்தது பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. க்குத் தெரியாமல் இருந்திருக்காது என்பது அமெரிக்காவின் குற்றச் சாட்டு.

இப்படிப் பயங்கரவாதிகளை மறைமுகமாக ஆதரித்து வரும் பாகிஸ்தான் எப்படி பயங் கரவாதத்துக்கு எதிரான போரில் இறங்கியிருக்கும்.

அமெரிக்காவோடு கை கோர்த்து நம்பகத்தன்மையுடைய நேச நாடாக நட்புறவை நீடிக்க முடியும் என அமெரிக்க செனட்டர் சூசன் கொலின்ஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் ஒசாமா தங்கள் நாட்டில் பதுங்கியிருந்தது தெரியாது என்பதை தகுந்த ஆதாரங்களுடன் பாகிஸ்தான் நிரூபிக்க வேண்டும் என அமெரிக்க உள்நாட்டுப் படைத் தளபதி லீபர்ஹேமன் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க படை நடவடிக்கையில் பாகிஸ்தான் தொடர்புபடவில்லை

## ஜனாதிபதி சர்தாரி மறுப்பு

(இஸ்லாமாபாத்)

பின்லேடனைப் பிடிக்க அமெரிக்க ராணுவம் நடத்திய வேட்டையில் பாகிஸ்தான் ராணுவமும் பங்கு பெற்று இருந்ததாக தகவல்கள் வெளியாயின.

ஆனால் இதைப் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது -

பின்லேடனைப் பிடிப்பதற்கு அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் கடந்த 10 ஆண்டுகளாக ஒத்துழைப்பு கொடுத்து வந்தது. ஆனால் நேற்று முன்தினம் அமெரிக்கப் படை நடத்திய தாக்குதலின்போது பாகிஸ்தான் படை எந்த உதவியும் செய்யவில்லை.

அமெரிக்கப் படைகளுடன் சேர்ந்து தாக்குதலிலும் ஈடுபடவில்லை. அதேபோல பின்லேடனுக்குப் பாகிஸ்தான் எந்த வகையிலும் அடைக்கலம் கொடுக்கவில்லை. ராணுவத்தினரும் அவருக்கு உதவி செய்யவில்லை.

அவர் அங்கு தங்கி இருந்தது பாகிஸ்தானுக்கு தெரியாது. பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுத்ததாக அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருப்பது அடிப்படை ஆதாரம் இல்லாதது.


யூகத்தின் அடிப்படையில் செய்திகளை வெளியிட்டு உள்ளனர் என சர்தாரி கூறினார்.



அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் மீதான தாக்குதலை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, துணை ஜனாதிபதி, வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் மற்றும் தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட்டோர் பிரத்தியேக நேரடி ஒளிபரப்பு மூலம் வெள்ளை மாளிகையிலிருந்து பார்வையிட்டதைக் காணலாம்.

# தேர்தல் ஆணையத்தின் நடைமுறை குறித்து நாடாளுமன்றில் விவாதிக்கப்பட வேண்டும்

## கருணாநிதி வலியுறுத்து



(சென்னை)

**தேர்தல் ஆணையம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ் வொரு நடைமுறையை பின்பற்றுவது, ஜனநாயகத்தை வளப்படுத்துவதற்கு உதவாது என்று முதலமைச்சர் கலைஞர் கூறியுள்ளார்.**

இதுபற்றி நாடாளுமன்றத்தில் விவாதிப்பதுடன், அரசியல் சட்ட நிபுணர்களையும் கலந்து ஆலோசித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் மட்டும் தேர்தல் ஆணையம் அதிக கெடுபிடிகளை விதித்துள்ளது பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என, மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் பேசியிருப்பது தொடர்பாக முதல் அமைச்சர் கலைஞர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணையம் என்ற அமைப்பு விருப்பு, வெறுப்புகளை அகற்றி அனைவருக்கும் பொதுவாகவும், நடுநிலையோடும் செயற்பட வேண்டிய ஒரு அமைப்பு.

இத்தகைய தேர்தல் கமிஷன் வெவ்வேறு அளவுகோல்களை கடைப்பிடிக்கக் கூடாது என்பதே மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் கருத்து ஆகும்.


தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு, முறைப்படுத்த வேண்டும் என்பதில் அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஒரே அமைப்பு ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு நடைமுறையைப் பின்பற்றுவது ஜனநாயகத்தை வளப்படுத்துவதற்கு உதவாது.

இந்திய அரசியல் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ள எந்தவொரு அமைப்பும், கடிவாளமின்றி ஓடுவதை அரசியல் சட்டம் அனுமதிக்கவில்லை.

மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் சுட்டிக்காட்டியிருப்பதைப் போல தேர்தல் ஆணையத்தின் செயற்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதிக்கப்படுவதுடன், அரசியல் சட்ட நிபுணர்களையும் கலந்தாலோசித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனநாயகத்தின் மீதும், அரசியல் சட்டத்தின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் கருத்து உதாசீனப்படுத்தக் கூடியது அல்ல எனத் தெரிவித்தார்.

# தீவிரவாத நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் முடிவுகட்ட வேண்டும்

## பிரதமர் மன்மோகன் வேண்டுகோள்



(சென்னை)

பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு அந்நாட்டு அரசு முடிவு கட்ட வேண்டும் என்று பிரதமர் மன் மோகன் சிங் கூறி யுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங் மேலும் கூறியிருப்பதாவது -

தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில், பின்லேடன் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றம். தீவிரவாத குழுவினருக்கு இது நிச்சயமாகப் பின்னடைவை ஏற்படுத்தும்.

அப்பாவி மக்களை அச்சுறுத்தும் தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு பாக். அரசு முடிவுகட்ட வேண்டும். அதற்கு சர்வதேச சமூகமும் துணைநிற்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

# மதுபான விளம்பரத்தில் நடிக்காதீர்

# டோனிக்கு, அன்புமணி வேண்டுகோள்

(புதுடில்லி)

மறைமுக மதுபான விளம்பரங்களில் நடிக்க வேண்டாம் என்று கிரிக்கட் வீரர் டோனிக்கு முன்னாள் அமைச்சர் அன்புமணி ராமதாஸ் வேண்டுகோள் கடிதம் எழுதினார்.

இதுகுறித்து அவர் டோனிக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்திய கிரிக்கட் அணிக்கு தலைமை தாங்கி உலகக் கிண்ணத்தைப் பெற்றுத்தந்த உங்களுக்கு எனது பாராட்டுகளையும் வாழத்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய இளைஞர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக திகழக்கூடிய நீங்கள், லட்சக்கணக்கான இளைஞர்களின் வாழ்வைப் பாழாக்கும் போதைப் பழக்கத்தை அவர்கள் மீது திணிக்காமல் மறைமுக மதுபான விளம்பரங்களில் இருந்து விலக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுபான விளம்பரங்கள் இந்திய நாட்டில் சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளன. இதனால், சோடா, தண்ணீர், இசைத்தட்டு என இல்லாத பொருட்களின் பெயரில் மதுபான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

இத்தகைய மறைமுக மதுபான விளம்பரங்களில் நடிக்க முடியாது என சச்சின் டெண்டுல்கர் மறுத்துவிட்டதாக செய்திகள் வெளியாகின. அவருக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 20 கோடி வழங்க மதுபான நிறுவனங்கள் முன்வந்தன. ஆனால், அதை அவர் ஏற்க மறுத்து விட்டார்.

கோடிக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலத்தை கருதி நீங்கள் மதுபான நிறுவனங்களின் சதிவலையில் சிக்காமல் மறைமுக மதுபான விளம்பரங்களை தவிர்க்க வேண்டும். தற்போது நீங்கள் இடம்பெற்றுள்ள அத்தகைய விளம்பரங்களில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இருவர் பிடிபட்டனர்

(ராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில், கியூ பிரிவு பொலிஸார் ரோந்து சென்றபோது, இலங்கைக்கு படகில் அகதிகளை ஏற்றிச் செல்ல முயன்ற, இலங்கை மன்னார் பகுதியைச் சேர்ந்த சேகர், ராமேஸ்வரம் நடராஜபுரத்தைச் சேர்ந்த ஈஸ்வரன் ஆகியோரை பிடித்து விசாரித்தவேளை அவர்கள் அகதிகளை ஏற்றிச் செல்லவுள்ளதனை ஒப்புக் கொண்டனர்.

தொடர்ந்து, இவர்களை ராமேஸ்வரம் கோவில் பகுதி பொலிஸ் நிலையத்தில் கியூ பிரிவினர் ஒப்படைத்தனர். பொலிஸார் இருவரையும் கைது செய்து, விசாரித்து வருகின்றனர்.

# பயங்கரவாதிகளுக்கு தஞ்சமளிப்பதை பாகிஸ்தான் நிருபணமாக்கியுள்ளது

## பா.ஜனதா தெரிவிப்பு



(சென்னை)

பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு தஞ்சமளித்து வருவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது என பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கூறியுள்ளார்.

ஒசாமா கொல்லப்பட்டது குறித்து பா.ஜ.கவின் செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கூறியுள்ளதாவது -

ஒசாமா பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டது, அந்நாடு பயங்கரவாதிகளுக்குத் தஞ்சம் அளித்து வருவதை வெட்ட வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

மும்பைத் தாக்குதல் பயங்கர வாதிகளுக்கும் பாகிஸ்தான் தஞ்சம் கொடுத்து வைத்துள்ளது. அவர்களை இந்தியாவிடம் பாகிஸ்தான் அரசு ஒப்படைக்க வேண்டும். மத்திய அரசு இந்த விடயத்தில் முனைப்புடன் செயற்பட்டு, மும்பைத் தாக்குதல் பயங்கர வாதிகளை இந்தியாவுக்குக் கொண்டு வரவேண்டும் எனக் கூறியுள்ளார்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர்: ஜெ.ஜெகசிகன்
முகவரி: 344, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### ஆறாவது அகவையில்



பெயர்: ம.கோமகள்
முகவரி: தும்பளை தெற்கு, பருத்தித்துறை.

(03.05.2011 கொண்டாடினார்)

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................
முகவரி : ....................................
பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ....................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# வீதி அபிவிருத்திக்கு கடன் உலக வங்கியுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கைக்கு 100 மில்லியன் டொலர் கடனுதவி வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் உலகவங்கி ஒப்பந்த மொன்றில் கையெழுத்திட்டுள்ளது.

வினைத்திறனான தேசிய வீதிமுறை மையை ஏற்படுத்துவதற்கும் போக்கு வரத்துச் செலவைக் குறைப்பதற் கும்,வளர்ச்சியையும், வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் அரசாங்கத்திற்கு உதவுவதற்காக நிதியளிப்பதற்கும் மேலதிகமாக இக் கடனுதவி வழங்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் வடக்கு,கிழக்கு மாகா ணங்களின் தொடர்பை முன்னேற்றுவ துடன்,யுத்தத்தின் முடிவின் பின்னரான நன்மைகளை அதிகரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு உதவும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிதியுதவி மூலம் அம்பேபுஸ்ஸ முதல் தம்புள்ளை வரை மற்றும் கந் தளாயிலிருந்து திருகோணமலை வரை என இரு கட்டங்களாக ஏ6 வீதியில், 134 கிலோமீற்றர் பகுதி இரு கட்ட ங்களாக அபிவிருத்தி செய்யப்பட வுள்ளன.

# புதிய உல்லாசத்துறை வலயங்களை வடக்கு,கிழக்கில் அமைக்கத்திட்டம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல புதிய உல்லாச பயண வலயங் களை அபிவிருத்தி செய்வதற்கு அர சாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை உட்பட கரை யோர நகரங்கள், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்மோட்டை மற் றும் மன்னார் மாவட்டத்தில் சிலாவத் துறை ஆகிய பிரதேசங்களே வலய மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட வுள்ளன.

சிலாவத்துறை மற்றும் புல்மோட்டை ஆகிய பிரதேசங்களை உல்லாச வலய மாக்குவதற்கான முதல் கட்ட வேலையாக உரிய காணிகளை அடை யாளப்படுத்தும் வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக பொருளாதார அபி விருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள் ளார்.

இந்த வலயங்களுக்கான அடையா ளங்காணப்பட்ட காணிகள் சட்டபூர்வ மாகக் கையேற்றதன் பின்னர் உட்கட் டமைப்பு நடவடிக்கைகளுக்கான கேள்விப் பத்திரங்களைக் கோர முடியும எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 52 கோடியே முப்பது லட்சம் அமெரிக்க டொலர் உல்லாச பயண துறைக்காக கிடைத்திருப்பதா கவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சிறைக் கைதிகளுக்கு கல்வி

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் உள்ள கைதி களின் கல்வித் தகைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான வேலைத் திட்டங்களில் சிறைச்சாலை மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிறி கஜதீர முன்னெடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை ஒன்றின் மூலம் சிறைச் சாலைகளில் உள்ளவர்களில் 15 சதவீத மானவர்களுக்கு எழுதவோ அல்லது வாசிக்கவோ முடியாத நிலை உள்ளது. இந்நிலைமையைப் போக்கும் வகையில் சிறைச்சாலைத் திணைக்களம் கல்வி அமைச்சுடன் இணைந்து இந்தத் திட்டத்தை மேம்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன்,இளைஞர் விவகார அமைச்சின் உதவியுடன் கைதிகளுக்கு தொழிற் கல்விப் பயிற்சிகளை மேற்கொள்ளவும் தமது அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

# இலஞ்ச,ஊழல் விசாரணை ஆணைக்குழு அமைப்பது தொடர்பாக ஆராய்வு

(கொழும்பு)

**இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை அமைக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவித்துள்ளார்.**



குறித்த ஆணைக்குழுவை அமைப் பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக இந்த ஆணைக்குழுவின் ஊடாக நட வடிக்கைகளை எடுக்க முடியும்.

அத்துடன் எந்தவொரு நபரும் இந்த ஆணைக் குழுவில் முறைப்பாடுகளை முன் வைக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஆணைக்குழு தற்போது ஸ்தாபிக்கப் படாததன் காரணமாக இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்த முறைப்பாடுகள் விசார ணை செய்யப்படுகின்றதா என்பது தொடர்பாகத் தனக்குத் தெரியவில்லை எனவும் பிரதம நீதியரசர் மேலும் குறிப் பிட்டார்.

## ஒட்டுசுட்டானில் ஆயுதங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிர தேசத்தில் சுமார் 20 அடி ஆழமுடைய பாழடைந்த கிணற்றில் மறைத்து வைக் கப்பட்டிருந்த ஆயுதங்கள் சிலவற்றை வட மாகாண விசேட சோதனைப் பிரி வினர் மீட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரி வித்தார்.



60 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு கள் 21, 60 மில்லி மீற்றர் குண்டு ஒன்று மற்றும் கைக்குண்டொன்றும் மீட்கப் பட்டுள்ளது.

ஆயுதங்கள் மீட்கப்பட்டதை அடுத்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

# மீள்திருத்த பெறுபேறுகள் கிடைத்ததும் பல்கலை வெட்டுப்புள்ளி வெளியாகும்

## மானிய ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

மீள் திருத்தத்திற்கான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்ற இரண்டு வாரங்களுக் குள் பல்கலைக்கழகங்களுக்கு மாண வர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளி வெளியிடப்படும் என பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறை சுமார் 22 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியை வழங்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலை வர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரி வித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கான அனு மதியை வழங்கிய பின்னர் காணப்படும் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய முடி யாமையினால் சிக்கல்கள் தோன்று கின்றன.

காலதாமதத்திற்கு பின்னர் பல் கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிக்க விரும்பாமை இந்த சிக் கலுக்கான காரணமாகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பல்கலைக் கழகங் களின் நாட்காட்டி காணப்படாமையே இந்தப் பிரச்சனைக்கு முக்கிய காரண மெனவும் பேராசிரியர் காமினி சமர நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## படகு கட்டும் துறைமுகம் மன்னாரில் அமைக்கப்படும்

(கொழும்பு)



மன்னாரில் படகு கட்டும் துறைமுக மொன்று அமைக்கப்படவுள்ளது.

சிலாவத்துறை கடற்கரைப்பகுதியில் இதற்கான ஆரம்ப வேலைத்திட்டப் பணிகளைப் பார்வையிடுவதற்காகவும் மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிவதற்காகவும் துறைமுக நிர் மாணிப்புக் குழுவினர் அண்மையில் சிலாபத்துறைக்கு வருகை தந்து அங்குள்ள மீனவர்களைச் சந்தித்து உரையாடினர். பின்னர் சிலாவத்துறை கடற்கரைக்குச் சென்று துறைமுகம் அமையவுள்ள இடத்தையும் பார்வை யிட்டனர்.

சகல வசதிகளையும் கொண்டதான படகு கட்டும் துறைமுகம் டென்மார்க் கின் நிதியுதவியுடன் துறைமுக கூட்டுஸ் தாபனத்தினால் அமைக்கப்படவுள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக பெருமளவு முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிவிப்பதற்கான 1929 எனும் தொலை பேசி இலக்கத்தின் மூலம் ஏப்ரல் 30 ஆம் திகதிவரை பொதுமக்களிடமிருந்து 21,507 முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத் திருப்பதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சுத் தெரி வித்துள்ளது.

கடந்த வருடம் ஜுன் மாதம் இந்த தொலைபேசிச் சேவை அறிமுகப்படுத்தப் பட்டது. அதேவேளை பல்லாயிரக் கணக்கான முறைப்பாடுகள் கிடைத்த போதிலும் அவற்றில் 4323 புகார்கள் மாத்திரமே உண்மையானவை என அமைச்சு அதிகாரியொருவர் தெரி வித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மாவட்டங்கள் அடர்த்தியான சனத் தொகையைக் கொண்டிருப்பதே அங் கிருந்து அதிக முறைப்பாடுகள் கிடைப் பதற்குக் காரணம் எனவும் அவர் கூறி னார்.சிறார்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள் குறித்தும் அப்பிரச்சினை களை கட்டுப்படுத்துவதற்காக குழு வொன்றை அமைப்பது குறித்தும் கலந்துரையாடுவதற்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பல அரச சார் பற்ற நிறுவனங்கள் அண்மையில் சந்தித்ததாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக தேசிய தரவுதளமொன்றை அமைப்பதே இக்குழுவின் பிரதான நோக்கம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசா நாயக்க கூறினார்.

## அதே இடத்தில் அபராதம்

(கொழும்பு)

நுளம்பு பெருகுவதற்கு வழிவகுக் கும் விதமாக சூழலை வைத்திருக்கும் நபர்களுக்கு அதே இடத்தில் 2000 ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக 2007ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்பு பரவல் தடைச் சட்டத்தில் எதிர்வரும் வாரங்களில் திருத்தம் செய்யப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இச்சட்டம் மக்களுக்கு நட்பானதாக இருப்பதைவிட நுளம்புகளுக்கு நட்பானதாக இருப்பதால் அதில் பல திருத்தங்களைச் செய்யுமாறு அதிகாரி களுக்கு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன அறிவுறுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் டபிள்யூ.எம்.டி. வன்னிநாயக்க தெரி வித்தார்.

# யாழ்.நூலகத்தின் சிறுவர் பகுதி புனரமைப்புப் பணிகள் துரிதம்

## அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்



(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்திலுள்ள சிறுவர் பகுதி, சிங்கப்பூர் அரசின் நிதியுதவியுடன், புனரமைக்கப்பட்டு வருவதாக பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சிறுவர் பகுதி புனரமைப்புப் பணிகளுக்கு முப்பது இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட பணிகள், எதிர்வரும் யூலை மாதமளவில் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. சிறுவர் பகுதியின் கட்டட உட்கட்டமைப்பு திருத்தியமைக்கப்படு வதுடன், கணினிகள், நூல்கள் மற்றும் சிறுவர்களுக் கான உபகரணங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகள் சிங்கப்பூர் அரசினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான பொருட்கள் தற்போது எடுத்து வரப்பட்டுள்ளது.

புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்து நூல்கள் கையளிக்கும் நிகழ்விற்கு சிங்கப்பூரிலிருந்து அதிதிகள் வரவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


இதேவேளை, இந்த புனரமைப்புப் பணிகளை நேற்றைய தினம் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

(கா)

# ஊடகவியலாளர் லசந்த படுகொலை

# பொன்சேகா மீது வழக்குத் தாக்கல் முஸ்தீபு





(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பில் சரத் பொன்சேகா மீது வழக்குத் தாக்கல் செய்ய பாதுகாப்புச் செயலாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அதற்கான சாட்சிகளாக வாகரை, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் பணியாற்றும் இராணுவ வீரர்கள் எட்டுப் பேர் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்டு தயார் செய்யப்பட்டு வருகின்றனர்.

சில வாரங்களுக்கு முன் அரச சமாதான செயலகத்தின் முன்னாள் பணிப்பாளரும், ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க லசந்த விக்கிரமதுங்க கொலையில் சரத் பொன்சேகாவுக்கு தொடர்பிருப்பதாக ஒரு தகவலை வெளிப்படுத்தியிருந்தார்.

அதனை இலங்கையிலுள்ள பிரித்தானியத் தூதரகம் தனக்குத் தெரிவித்ததாகவும், ஆயினும், பின்னாளில் தூதரக அதிகாரிகள் சரத் பொன்சேகாவின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து, அத்தகவலை மறைத்து விட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், அண்மையில் ஊடகமொன்றுக்கு வழங்கியிருந்த செவ்வியொன்றில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும், லசந்த விக்கிரமதுங்கவின் கொலையாளி யார் என்பது பற்றிய விபரம் தனக்குத் தெரியும் என்றும், சந்தர்ப்பம் வரும்போது அதனை வெளியிடுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறான பின்புலத்திலேயே தற்போது சரத் பொன்சேகா தான் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கான உத்தரவை விடுத்தார் என்று இராணுவத்தினரைக் கொண்டே சாட்சியமளிக்க வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அவ்வாறு சாட்சியமளிக்க முன்வரும் படைவீரர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் விசேட வரப்பிரசாதங்கள் மற்றும் வசதிகளை வழங்குமாறு பாதுகாப்புச் செயலாளர் இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் வடக்கிலிருந்து கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள படை அதிகாரி ஒருவர் அதற்கான ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது.

# வன்னியில் சட்டம் ஒழுங்கு அமுல் அதிகாரிகளுக்கு இமாலய சவால்

(கிளிநொச்சி)

சிவில் சட்டங்கள் தொடர்பில் வன்னி மக்களுக்கு போதிய விளக்கம் கிடையாது என கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரி வித்துள்ளார்.

சிவில் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றி மக்களுக்கு போதியளவு அறிவின்மையினால் அரசாங்க அதிகாரிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னிப் பிரதேசம் காணப்பட்டதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பிரதேசத்தில் மரமொன்றை வெட்டுவதற்கு எவ்வாறான சட்டத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படை விடயங்கள் கூட வன்னி மக்களுக்கு தெரியவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், கிராம உத்தியோகத்தர்களின் மூலம் பிரதேச மக்களுக்கு சட்ட நடைமுறைகள் பற்றி விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வீட்டுத் தோட்டத்தில் காணப்படும் மரங்களைக் கூட விரும்பியவாறு வெட்ட முடியாது என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. எனினும், எங்கள் வீட்டு மரங்களை ஏன் வெட்ட முடியாது என வன்னி மக்கள்கேள்வி எழுப்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மணல் அகழ்வு தொடர்பான சட்ட விதிமுறைகளும் வன்னி மக்களுக்குத் தெரியவில்லை என அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பிரதேசங்களில் வீதிப் போக்குவரத்து சட்டங்களை அமுல்படுத்துவதில் பெரும் சாவல்களை எதிர்நோக்க நேரிடுவதாகத் தெரிவித்துள்ளார்.

வன்னி மக்கள் வீதிப் போக்குவரத்து சட்டங்கள் பற்றி போதிய விளக்கமின்றி காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில வகை விலங்குகளை வேட்டையாடுவது சட்டவிரோதமானது என்ற சிவில் சட்டம் அநேகமானவர்களுக்கு தெரியவில்லை என பெயர் குறிப்பிட விரும்பாத அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக புலிகளின் கட்டுப்பாட்டில் வாழ்ந்த காரணத்தினால், வன்னி மக்களுக்கு சாதாரண சட்டங்கள் பற்றி போதியளவு விளக்கமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 'விடாது தொடருவோம்' என்று ஹெல உறுமயவின் போராட்டம்

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை எதிர்த்து ஜாதிக ஹெல உறுமய நேற்று மாலை 4.30 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தியது. 'இடை நிறுத்தாது தொடர்வோம்' என இச் சத்தியாக்கிரகத்திற்கு ஹெல உறுமய பெயரிட்டுள்ளது. இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ள விசேட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்கத்தைய கொலைக்கார கூட்டத்தினரின் மாயையில் சிக்கிக் கொண்டுள்ளார் பான் கீ மூன். இதன் காரணமாகவே இலங்கைக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இந்த பொய்யான அறிக்கையை சத்தியத்தாலும், தர்மத்தாலும் தோல்வியடையச் செய்வதற்காகவே 2600 ஆம் ஆண்டு சம்புத்த ஜயந்திக்கு தயாராகும் நாம் பான் கீ மூனின் மூர்க்கத்தனமான அறிக்கைக்கு எதிராக தர்மத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து சத்தியாக்கிரகத்தை நடத்துகின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டள்ளது.

## ஓசாமாவின்...

நாட்டைச் சேர்ந்த இணையத்தள பத்திரிகையில் பிரசுரமான படத்தைக் கொண்டு கணினியில் கிராபிக்ஸ் மூலம் உருவாக்கப்பட்டுள்ளதாக AFP புகைப் படங்களுக்கான தலைமை ஆசிரியர் மெலடன் அன்டனோவ் தெரிவித்துள்ளார்.

பின்லேடன் கொல்லப்பட்டமை தொடர்பாக அமெரிக்கா வெளியிட்ட தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது. ஓசாமா பின்லேடனின் மறைவிடத்தில் அமெரிக்க இராணுவத்தின் ஈருடகப் படையினர் தாக்குதல் நடத்தி பின்லேடனை கைது செய்யும்படி ஒபாமா உத்தரவிட்டதாக பராக் ஒபாமா வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பின்லேடனின் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தியமையால் பின்லேடனைக் கொல்ல நேர்ந்த்தாக அறிவித்தனர். அத்துடன் கொல்லப் பட்டபின்னர் அவரது உடல் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவித்திருந்தனர்.

பின்லேடனின் உடலை இஸ்லாமிய சம்பிரதாயப் படி சடங்குகள் நடத்தப்பட்டு கடலில் வீசப்பட்டதாக அறிவித்தனர். உடலைக் கைப்பற்றிய அமெரிக்கா உடனடியாகக் கடலில் வீசியமை பலவித சந்தேகங்களை எழுப்பியுள்ளது. இறந்ததாகக் காட்டப்பட்டுள்ள பின்லேடனின் படத்தில் மோசடிகள் இடம்பெற்றுள்ளமையும் மேலும் சந்தேகத்தை வலுப்பெறச் செய்துள்ளது.

## பயங்கரவாதிகளின்....

5. யூசுப் முசாம்மில்:- லஷ்கர் இ தொய்பா இயக்கத்தின் இந்தியாவுக்கு எதிரான தாக்குதலுக்கான தலைவன். 2000 ஆம் ஆண்டில் காஷ்மீர் மாநிலம் சத்திசிவ்பூராவில் 34 சீக்கியர்களைக் கொல்ல காரணமாக இருந்தவன்.

6. ஷாஜித் மிர்:- 2008 ஆம் ஆண்டு மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை பாகிஸ்தானில் இருந்தபடி இயக்கியவன்.

## கனேடிய நாடாளுமன்றில்...

நாடாளுமன்றத்தில் பெற்று இரண்டாவது பெரும் கட்சியாக வந்துள்ளது தேர்தல் முடிவுகளின் படி கன்சவேட்டிவ் கட்சி 165 ஆசனங்களையும், புதிய ஜனநாயகக் கட்சி 104 ஆசனங்களையும், லிபரல் கட்சி 34 ஆசனங்களையும், புளக் கியூபெக்குவா 2 ஆசனங்களையும் பெற்றது.

பசுமைக் கட்சி ஒரு ஆசனத்தையும் தக்க வைத்துள்ளது. றொறன்ரோ பெரும்பாகத்தில் இடம்பெற்ற தேர்தலில் ஸ்காபரோ ரூச் ரிவர் தொகுதியில் போட்டியிட்ட ராதிகா சிற்சபைஈசன் 17ஆயிரத்து 200 வாக்குகளைப் பெற்று புதிய ஜனநாயகக் கட்சியின் வாக்கு வங்கியை மேற்படி தொகுதியில் கணிசமாக அதிகரிக்க வைத்து இத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த தேர்தலில் 4 ஆயிரத்து 900 வாக்குக்களைப் மாத்திரமே இந்தக் கட்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதர பல தொகுதிகளிலும் புதிய ஜனநாயகக் கட்சி, கன்சவேட்டிவ் கட்சி, லிபரல் கட்சி ஆகியன மிக நெருக்கமான வாக்குகளைப் பெற்றிருந்த துடன், நூற்றுக்கணக்கான வாக்குகளே வெற்றியை நிர்ணயித்தன.

இதேவேளை, கன்சவேட்டிவ் கட்சி சார்பில் போட்டியிட்ட கவன் பரஞ்சோதி 11 ஆயிரத்து 39 வாக்குகளை பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார். உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக புதிய ஜனநாயகக் கட்சி தெரிவாகியுள்ளது. இதன் பிரகாரம் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக் லெய்டன் எதிர்க்கட்சித் தலைவராகியுள்ளார்.


# மத்தியஸ்தர்சபை அங்குரார்ப்பணம்

(வேலணை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கான மத்தியஸ் தர்சபையினது ஆரம்ப அங்குரார்ப்பண நிகழ்வு இன்று காலை 10.00 மணியளவில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில், ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுக்கான மத்தியஸ் தர்சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை ஊர்காவற்றுறை பிரதேச செயலர் வழங்கவுள்ளார். பிரதேச தவிசாளர் செயலர் சு.தனபாலசிங்கம் தலைமையில் 15 பேருக்கு இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

(05)



# கிடு கிடு விலை உயர்வு; மக்களுக்கு அரசின் பதில் என்ன?

## அரசு மீது தொடுக்கிறது கணை ஐ.தே.க.

(கொழும்பு)

உயர்வடைந்து செல்லும் பொருட்களின் விலை தொடர்பாக அரசாங்கம் பொதுமக்களுக்கு உரிய பதிலை அளிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மக்களினால் சமாளிக்க முடியாத அளவிற்கு பொருட்களின் விலை உயர்வடைந்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வருமானத்தினை அதிகரிப்பதற்கு ஆலோசனைகளை வழங்குதல் அல்லது சம்பள உயர்வினை வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்ளாத பட்சத்தில், மக்கள் இந்த விலை உயர்வை எவ்வாறு பொறுத்துக் கொள்வார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்காக அரசாங்கத்திடம் எவ்விதமான பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் இல்லை என திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டினார்.

அதேவேளை, யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண வசதிகளையாவது அரசாங்கம் மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

மக்களின் மீது அனைத்துச் சுமைகளையும் விடுத்து, அரசாங்கம் தனது செலவீனங்களை குறைத்துக் கொள்வது ஏன் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

# வழக்கு விசாரணைக்காக பொன்சேகா சமுகம் தராதது ஏன்?

## சிறைச்சாலை ஆணையாளரிடம் விளக்கம்

(கொழும்பு)

சிறைவைக்கப்பட்டுள்ள முப்படைகளின் முன்னாள் பிரதானி சரத் பொன்சேகாவை சரியான நேரத்திற்கு நீதிமன்றில் ஆஜர்படுத்தாமை குறித்து நீதிமன்றிற்கு விளக்கமளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு நேற்று முன்னறிவித்தல் கடிதம் விடுத்துள்ளது.

தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமைக்கு எதிராக சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு நேற்று பிற்பகல 1.30 மணிக்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. குறித்த மனு விவாதத்தின்போது பிரதான சந்தேகநபரான சரத் பொன்சேகாவை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.

எனினும் பிற்பகல் 1.30 மணியளவில் வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சரத் பொன்சேகா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை, இதனை அடுத்து நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பில் உரிய விளக்கமளிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு ரஞ்சித் டீ சில்வா, ஏ.டபிள்யூ.ஏ.சலாம் ஆகிய நீதியரசர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளனர். அதன் அடிப்படையில எதிர்வரும் 9 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

# புலிகளின் துப்பாக்கியுடன் இராணுவச் சிப்பாய் கைது

(கொழும்பு)

புலிகளினால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களுடன் இராணுவச் சிப்பாய் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நொச்சியாகம பிரதேசத்தில் வைத்து குறித்த இராணுவச் சிப்பாயை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புலி உறுப்பினர்களினால் பயன்படுத்தப்பட்ட மைக்ரோ ரக கைத்துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளையும் குறித்த இராணுவச் சிப்பாயிடமிருந்து மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றத் தகவலை அடுத்து குறித்த இராணுவச் சிப்பாயிடம் சோதனை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் குற்றச்செயல்களில் ஈடுபட்டாரா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அநுராதபுர இராணுவ முகாமில் கடயைமாற்றும் படைவீரர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

---

### றொபேட் ஓ பிளேக்...

கழக உறுப்பினர்களையும், கிளி நொச்சி மாவட்டத்திலுள்ள சில பிரதேச மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் யு.எஸ்.எயிட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித்திட்டங்கள், தேவைகள் தொடர்பாகவும் குறிப்பாக இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள், உயர் கல்வி ஆகியவை தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

அத்துடன், இம்மாவட்டத்தில் எதிர்காலத் தேவைகள் சம்பந்தமாக அரச அதிபருடன் கலந்துரையாடினார். இச்சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி விசாகரூபன், தேசிய இளைஞர் சேவைகள் மேம்பாட்டு உதவிப் பணிப்பாளர் ஓ.கே.குணநாதன், கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜா ஜெனரல் நந்தன உடவத்த ஆகியோா் உட்பட அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனா்.

---

### ஐ.நா. அறிக்கை...

ஓ பிளேக் பேச்சுவார்த்தை நடத்த மாட்டார் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இலங்கையுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையில் பல்வேறு விடயங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிபுணர் குழு அறிக்கை விடயங்களை விடவும் விரிவான அளவில் இலங்கையுடன் அமெரிக்காவிற்கு தொடர்பு இருப்பதாக றொபேட் ஓ பிளேக் இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களுக்கு முதல் தடவையாக செல்வதற்கான சந்தர்ப்பம் கிடை க்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தின் இறுதியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

### இரத்ததான நிகழ்வு

வேலணைப் பிரதேசசபையின் மண்டபத்தில் நாளைய தினம் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த இரத்ததான நிகழ்வில், 60 வயதுக்கு உட்பட்ட ஆண்-பெண் இருபாலாரும் இரத்ததானம் செய்ய முடியும் என வேலணை பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராஜா கேட்டுள்ளார். (05)

---

### வடக்கின்...

ஊடாக அமெரிக்க அரசின் நிதியூட்டலின் மூலம் வடக்கில் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களையும் றொபேட் ஓ பிளேக் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

தனது வடபகுதி விஜயத்தின் போது சேகரித்த தகவல்களின் அடிப்படையிலும் கொழும்பில் அரச தரப்பு இராஜதந்திரிகளுடன், தான் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையிலும் யுத்தத்திற்குப் பிந்திய வடக்கின் நிலைவரம் என்ற தோரணையில் அறிக்கையொன்றை தயார் செய்து அமெரிக்க இராஜாங்கத் திணைகளத்திற்கு அனுப்பிவைப்பதற்கு றொபேட் ஓ பிளேக் நடவடிக்கை எடுத்துள்ளார்.

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை இரத்த வங்கியின் இரத்தத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக புத்தூர் மேற்கு கலைமதி சனசமூகநிலையத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடமாடும் இரத்ததான முகாம் நடைபெற இருப்பதால், இப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் சமுகம் கொடுத்து இரத்ததானம் செய்து, உயிர் காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் கேட்டுக்கொள்கின்றனர். (100)

# கொழும்பிலும் அதிக பாதுகாப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானில் அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில் அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதை அடுத்து, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கைக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் பின்லேடனின் மரணத்தை தொடர்ந்து பேரணிகள் நடைபெறலாம் எனக்கருதி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுரகத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்பிரிவின் கலகம் அடக்கும் பிரிவு, சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த 300 படையினர் அமெரிக்கத் தூதரகத்தைச் சுற்றிப்பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்குமுன்னரெப்போதும் இல்லாத அளவிற்கு இம்முறை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையிலேயே அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் கொழும்பை வந்தடைந்துள்ளார்.

# அமெரிக்கா போர்க்குற்றம் புரிந்துள்ளதா? கேள்வி எழுப்புகிறார் பிரதமர்

(கொழும்பு)

பாகிஸ்தானிற்குள் தனது படையினரை அனுப்பி ஒருவரை கொலை செய்துள்ள அமெரிக்கா போர்க்குற்றம் செய்துள்ளதா என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

பாகிஸ்தானிற்குள் நுழைந்ததுடன் மட்டுமன்றி ஒசாமா பின்லேடனின் சடலத்தினை எடுத்தும் சென்றுள்ளது.

இது ஓர் மனித உரிமை மீறலே. கொல்லப்பட்டவரின் சடலத்தினை எடுத்துச்சென்றது கூட போர்க்குற்றமாகும். அமெரிக்கா பாகிஸ்தானுள் நுழைந்து இவ்வாறான செயலைச் செய்தமை அந்த நாட்டின் இறைமைக்கு விடுத்துள்ள அச்சுறுத்தலாகும்.

அமெரிக்கா போன்றே தாமும் மே மாதம் 19 ஆம் திகதி செயற்பட்டதாகவும் ஆனால் அமெரிக்கா அதனைப் போர்க்குற்றம் என இலங்கை மீது குற்றம்சாட்டி வருகின்றது. நாம் பிரபாகரனைக் கொல்லும்படி உத்தரவிடவில்லை.

போர் இடம்பெறும்போதே பிரபாகரன் கொல்லப்பட்டார். இதுதான் இரண்டிற்கும் இடையிலான வித்தியாசம் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.


## யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன கொள்வனவு - விற்பனை சேவை நிலையம்

### திறப்புவிழா அழைப்பிதழ்

காலம் :- 06.05.2011
நேரம் :- காலை 10 மணி
இடம் :- சுன்னாகம் வீதி, புன்னாலைக்கட்டுவன்

**தலைமை**
திரு.சி.பொ.வ.மா.க.முதலியார்
[துலைவர், யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனம்]

**பிரதம அதிதி**
மான்புமிகு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா (M.P)
[பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு]

**சிறப்பு விருந்தினர்**
கௌரவ ஆளுநர் ஜி.எச்.சந்திரசிறி (RSP.GSP)
[வட மாநிலம்]
திருமதி இமெல்டா சுகுமார்
[அரச அதிபர் யாழ்.மாவட்டம்]

**கௌரவ விருந்தினர்கள்**
திரு.பற்றிக்நிறைஞ்சன்
[உதவி ஆணையாளர் கமநல சேவைகள் திணைக்களம், நல்லூர்]
திரு.எஸ்.சிவகுமார்
[பிரதி விவசாயப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி]
திரு.ஏ.சற்குணநாதன்
[ஆலோசகர், வடகிழக்கு அபிவிருத்தி சீ.ஐ.சீ. [அக்ரோ] வியாபாரம்]
திரு.செ.ரமேஸ் (JP)
[சமூகவியலாளன், யாழ்.கிளிநொச்சி, குடிநீர் விநியோகத் திட்டம், யாழ்ப்பாணம்]

(C/708)

**தங்களை அன்புடன் அழைக்கிறோம்.**

நன்றி
– யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனம் –


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.